உ

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8	துந்துபி௵ பங்குனி௴ கஉ 1923௵ மார்ச்சு௴ 14உ	பகுதி 9

கடவுள் வணக்கம்.

பூதமுத லாகவே நாதபரி யந்தமும்
பொய்யென் றெனைக் காட்டியென்
போதத்தி னடுவாகி யடியீறு மில்லாத
போதபூ ரணவெ ளிக்கு
ளேதுமற நில்லென்று பாயமா வைத்துநினை
வெல்லாஞ்செய் வல்ல சித்தா
மின்பவுரு வைத்தந்த வன்னையே நின்னையே
யெளியேன் மறந்துய் வனோ
வேதமுத லாகநல் லாகமத் தன்மையை
விளக்குமுட் கண்ணி லார்க்கு
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவா தம்புகலும் வாய்
வாதநோ யாளர்க்கு மெட்டாத முக்கணுடை
மாமருந் துக்கமிர் தமே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே. (1)

நேராயம் மௌனநிலை நில்லரமல் வாய்பேசி
யாரா யலைந்தீர்நீ ராகெடுவீர்—தேரீர்
திரையுந் திரையுநதிச் சென்னியனை நாவாற்
கரையுங் கரையுமனக் கல். (2)

அற்ப மனமே யகிலவாழ் வத்தனையுஞ்
சொற்பனங் கண்டாய்சொன் னேனுன்—கற்பனையொன்
றில்லா விடத்தே யெனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் தவி. (3)

அரும்பொருள் விளக்கம்.

1. பூதமுதலாக நாதபரியந்தமும்=பஞ்சபூதங்கள் முதல் நாததத்துவம் ஈறுகவுள்ள எல்லாத் தத்துவங்களும்.

பொய்யென்று=அநித்தியமென்று

எனைக்காட்டி=(பூதங்கள் முதல் நாதம் ஈறுக உள்ள எல்லாத் தத்துவங்களும் ஒன்றையொன்று அறியமாட்டா ஆன்மாவையுமறியமாட்டாவாதலின் அநித்தியஜடம். ஆகவே யுன்னுலறியப்பட்ட அவைகளில் எதுவும் நீயல்ல. அவையனைத்தையும் அறியும் ஆன்ம சொரூபமே நீயென்று) என் உண்மைச் சொரூபத்தை நான் அறியக்காட்டி.

என் போதத்தின் நடுவாகி=என் அறிவினுள்ளாகி

போத பூரணவெளி=ஞான பூரணமான ஆகாயம். அதாவது சிதாகாயம்.

ஏதுமறநில்=மனமாதி தத்துவங்களியாவும் விட்டு நில்.

தாயுமான சுவாமிகளே, "சின்மயானந்த குரு" வில்,

"கூடுத லுடன்பரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரித லற்று
* * * * * *
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமு மற்று
* * * * * "

என்று கூறியதன்பொருள் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

"உபாயமாவைத்து"—சகல கேவலங்கள் தாக்காத நிலை யின்னதென்று வாக்கால் கூறமுடியாததாதலின், அந்த நிலையில் நான் நிற்குமாறு உபாயமாக அருள்புரிந்தனை என்றூர்.

உட்கண்=ஞானக்கண்

வீறுவாதம் புகலும்வாய் வாதநோயாளர்=ஆசானே, ஆப்த நண்பனே சுருதியுக்தியனுபவங்களுக்கு ஒத்ததாகக் கூறும் உண்மையை யேற்று ஞானுனுபவத்தைப் பெற முயலாமல், தன் கூற்றையே சாதிக்க வெண்ணி வீண்குதர்க்கம் பேசிக்கொண்டும், வேதாந்தம் மெய் சித்தாந்தம் பொய், சித்தாந்தம் மெய் வேதாந்தம் பொய் என்று வாதச்சண்டை யிட்டுக்கொண்டும் காலம் போக்கும் மந்தமதியினர்.

முக்கணுடை மாமருந்து=பரமசிவம்

விசேஷம்.

உமாதேவியார் சிவபிரானது அருளாகிய சத்தியாதலால் அவருக்கு அமுதம்போன்றவள் என்றருளினர். பரம்பொருள் ஒன்றே சர்வஞ்ஞத்வமாகிய ஞானமுடையதாதலின் அதற்குச் சூரியன் சந்திரன் என்ற

இரண்டு நேத்திரங்களன்னியில் ஞானமாகிய ஒரு கண்ணும் உளதென்று வேதங் கூறியது. இலலாட மையமாகிய சுழிமுனையே ஞானம் பிரகாசிக்கு மிடமாதலில் நெற்றிக்கண் என்று அதற்குப் பெயர். பிரகாசத்தை யளிப்பதால் அக்னியாகிய கண் என்றும் கூறப்படும். பரம்பொருள் ஞானமே சொரூபமாக வுடையதாதலின் பரமசிவன் "அழல்வண்ணன்," "தீவண்ணன்," "அழலாடி" என்றும் வேதம் கூறுகின்றது. வெண்மை சத்துவகுணத்தையும் ஞானத்தையும் குறிக்கும் நிறமாதலின் சிவபிரான் நீறு பூசிய மேனியன் என்றும் கூறப்பட்டது. இவ்வாறே சடை, மதி, அரவம் முதலிய சின்னங்கள் யாவும் அவரது பலவித சத்திகளைக் குறிப்ப வைகளேயாகும்.

உருவம், அருவம், உருவாருவம் மூன்றுங் கடந்ததும், இன்னதென்று வாக்கால் கூறவொண்ணாததும், மனதால் நினைக்க வொண்ணாததுமாகிய பரம்பொருளை மேற்கண்டவாறு உருவகப்படுத்திக் கூறியிருப்பதால் தான் கடவுளின் எண்ணிறந்த சத்திகளையும், பூரண இலக்ஷணங்களையும் நாம் உணரவும், நீடித்தகாலம் பகவானைப்பற்றி விவகரிக்கவும், அதனால் சித்தசுத்தி யடைந்து அவனருளைப் பெறவும் சாதகமாகிறது. அதோடு இந்த உண்மைகள் மனிதன் ஆராய்ச்சிக்கு மறைபடாமல் எப்போதும் அறி யக்கூடியவண்ணம் வெளிப்படையாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் ஒரு வரம்பிலடங்காத ஒன்றை வரையறுத்துக் கூறுவதாகும்.

இவற்றை யெல்லாம் விட்டு "கடவுள் அரூபி" என்றுமட்டும் கூறி விடுவது "கடவுள் யாரோ எனக்குத் தெரியாது" என்று கூறுவதாகுமே யன்றி எள்ளளவேனும் கடவுள் இலக்ஷணம் அறிந்த தன்மையாகாது.

இந்த உண்மையை யறியாதவர்களும் ஆன்மாவின் இலக்ஷணமும், ஞானம் இத்தன்மையதென்பதையும் அடியோடறியாதவர்களுமாகிய புறச் சமயிகள் நாம் கடவுளை யுருவமுடையவராகவும், மனைவியுடையவராகவும் கருதுகிறோமென்று கூறுகிறார்கள். நம்மவர்கள் அவர்கள் வார்த்தை களுக்குச் செவி கொடாதிருக்கவேண்டும்.

2. "மௌன நிலை"—மௌனம் என்பது மனோமௌனம், வாக்கு மௌனம், காஷ்ட மௌனம் என மூவகைப்படும். இவற்றில் மனம் ஒன் றையும் சிந்தியாமல் அசைவற்று நிவாத தீபம்போலும், அலையற்ற சாகரம் போலும் நிற்பது மனோமௌனம். வாக்கால் ஒன்றையும் வசனிக்காம லிருப்பது வாக்கு மௌனம். தேகத்தால் ஒன்றையும் செய்யாதிருப்பது காஷ்ட மௌனம்.

ஈண்டு கூறியது இந்திரியங்களின் வழிச்செல்லவொட்டாது மனதை யடக்கிச் சலனமின்றி ஈசுவரத்தியானத்தில் நிலைக்கச்செய்வதாகிய நிலை.

திரை உந்து இரையும் நதி=அலைபொருந்திச் சத்திக்கு நதி. அதா வது கங்கை.

வீணாக வாசாஞானம் பேசிக்கொண்டு திரியாமல் மனதை ஒரு வழிப் படுத்தி ஈசுவரத் தியானத்தில் நிலைக்கச்செய்தால் அவனருள்பெறலாம் என்பதாம்.

3. உலகவாழ்வு அத்தனையும் சொற்பனம்=மாயா காரியமாகிய உலகமும் அதிலுள்ள போகங்களும் கனவுபோன்றனவாகும்.

அதாவது கனவு காணும்போதுமட்டும் உண்மையாகத் தோற்றும். அப்போது சம்பவிக்கும் நன்மைகளுக்குச் சந்தோஷமும், துன்மைகளுக்குத் துக்கமும் அடைகிறோம். ஆனால் விழித்தபோதோ யாவும் பொய் யெனத் தோன்றும். உலக விஷயங்களும், நாம் அஞ்ஞானமாகிய தூக்கத்திலிருக்குமட்டும், மெய்யாகவேதோற்றும். அஞ்ஞான நித்திரை யொழிந்து ஞானமாகிய விழிப்பு வந்ததே உலகம் கனவுபோல் பொய் யாய்த் தோன்றிவிடும். விழித்தபின் முன்புகண்ட கனவைப்பற்றி நினைத்தால் சந்தோஷமாவது பயமாவது தோற்றுமல் வீணை பெரும்பயம் நீங்கியதுபோன்ற ஒருவித நிம்மதியே தோன்றும். அதுபோலவே ஞானம் வந்தவனுக்கும் உலக விஷயங்களில் சுகதுக்கங்கள் புலப்படா. ஞான தசையில் உலகம் பொய்த்தோற்றமாய்ப் போவதால், ஒருகாலத்தில் மெய்யாகவும், ஒருகாலத்தில் பொய்யாகவும் தோன்றும் உலகமும் அதன் காரணமாகிய மாயையும் அநித்தியமேயாகும். மாயையும் நித்தியம் என்று சிலர் கூறுகிறார்களேயெனின்,

இரண்டு பட்சமும் உண்மையே. எப்படியெனின் வியஷ்டியில் நோக்குங்கால் மாயை அநாதி, ஆனால் அநித்தியமே. ஒரு மனிதன் ஞானத்தை யடைந்ததும் அந்த ஆன்மாவரையில் மாயை யொழிந்தது. தாயுமான சுவாமிகள் “மாயையெனும் திரையை நீக்கி நின்னை யாரறியவல்லார் ?” என்றார். மாயை நித்தியமாயின் அவனால் அது ஒழிக்கப்பட்டிராது. ஆதலின் அநித்தியமே.

அவன் வரையில் மாயை அநித்தியமாய் முடிந்தாலும் சமஷ்டியாகிய உலகமாயை யொழியாமலே யிருக்கும். அம்மாயையின் காரியமாகிய உலகமும் இருந்துகொண்டே யிருக்கிறதன்றோ; இதனால் மாயை நித்திய மென்று கூறப்பட்டது.

இந்த இரண்டு பட்சங்களிலும் நாம் மாயையை யொழித்து முத்தி யடையவேண்டியவர்களாதலின் மாயை அநித்தியம் என்ற பக்ஷத்தையே சித்தாந்தமாகக் கொள்ளல் வேண்டும். ஆனால் மற்ற பட்சம் தவறென்று கண்டித்து வாதாடுவது அறியாமையாகும்.

“கற்பனையொன்றில்லாவிடம்”=ஒரு கற்பனையுமின்றி ஆன்மசொருப மாத்திரமாய்த் தனித்துள்ள விடம்—முதல் பாசுரத்தில் “ஏதுமறநில்” என்று கூறிய நிலைமை எந்தத்தானமோ அதையே இதுவும் குறிக்கிறது. அந்தப் பொருளே இதற்கும் பொருந்தும்.

சரியை கிரியை.

நேயர்களே! சரியை கிரியைகளைப் பற்றியும், கடவுளை உருவமாகப் பாவித்துப் பூசிப்பதாகிய சகுணோபாசனையைப்பற்றியும் நமது சஞ்சிகையில் ஆங்காங்கு நம்மாலும் விஷயதானம்புரியும் நண்பர்களாலும் வரையப்பட்டுள்ளது. ஆயினும் இப்போது ஒருவர் சரியை, கிரியை, சகுணோபாசனை, கர்மம் என்பவற்றைப் பற்றிச் சஞ்சிகையில் வெளியிடும்படி நமக்கு ஒரு வியாசம் வரைந்தனுப்பியுள்ளார். சஞ்சிகையில் வெளியிடும்படி எழுதியவர் பலபேருக்கு அவ்விஷயங்களை வாயாலும் போதித்திருக்கலாகும். அவர் உபகாரச் சம்பளம் பெற்றிருப்பவர் என்று தெரிகிறபடியால் வயது முதிர்ந்தவராகவுமிருக்கவேண்டும். அவர் நாமத்தால் அவர் பிராம்மணரென்றே தெரிகிறது. அவர் கடிதத்தில் தம் பெயரை வரைந்திருப்பினும் வியாசத்தின் முடிவில் "கோவிந்தன்" என்று புனைப்பெயர் குறித்திருப்பதால் அவர் பெயரை நாம் வெளியிடவில்லை. நாம் கூறப்போவதும் கண்டிக்கப்போவதும் அவர் வியாசத்தில் கூறியுள்ள விஷயங்களையேயன்றி அவரையல்ல. வயது முதிர்ந்த ஒரு பிராம்மணர் கூறும் ஆன்மார்த்த விஷயங்களைச் சாதாரணமாக யாவரும் ஏற்றுக்கொள்வதோடு அவற்றில் நம்பிக்கையும் கொள்வார்கள் என்பது சுபாவம்.

ஆனால் அவர் கூற்றுக்களைச் சாத்திர ஆராய்ச்சி செய்த அறிவாளிகளில் ஒருவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். உலகில் பெரும்பாலோர் ஆராய்ச்சியின்றிப் பக்தி மார்க்கத்திலிருப்போரே. அவர் கூற்றுக்கள் அத்தகையோரை யெல்லாம் அடியோடுகெடுத்து அவர்கள் ஆன்மார்த்த விஷயத்திற்குக் கேடுவிளைவிக்கத்தக்கவைகளாக விருப்பதால் நாம் அவற்றைக் கண்டித்துச்

சாத்திரங்களில் கூறியுள்ள உண்மை யின்னதென வெளிபிடவேண்டியது அவசியமாயிற்று. அவர் அனுப்பியுள்ள ஞானம் என்ற விஷயத்தை அவர் எழுதியபடியே இங்கு வெளியிடுகிறோம்.

ஞானம்.

(1) நண்பர்காள்! மா. மௌன குரு சுவாமியால் அடியேன் அறிந்த சில விஷயத்தை எழுதி யிருக்கிறேன். ஒருவன் ஞானம் அடையவேண்டின் காமக்குரோதாதியை நீக்கவேண்டும்; மன * பதைபதைப்பு ஆகாது; மன உறுதிவேண்டும்; சர்வ உயிர்களும் சிவமாய் பாவிக்கவேண்டும்; சாதி பேதம் கூடாது; சாதிபேதமே வஸ்துவை நிந்தித்தது ஆகும்.

(2) தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் பாவித்து இரங்குவதே கருணை யுள்ளவன் என்றும் சிவபூசை செய்வோன் என்றும் பக்திமான் என்றும் சத்தியத்தை உடையவன் என்றும் சொல்லலாம். ஆதலால் ஞானம் அடைபவனுக்கு இதே ஓர் ஆதரமாகக் கொண்டு ஞானம் அடையலாம். மேல்கீழ் என்பதைத் தள்ளவேண்டும். சர்வமும் தானுகவும் தான் சர்வமுமாகவும் இருக்கவேண்டும்.

(3) சரியை கிரியை எப்போதும் ஆகாது. அதைச் செய்தால் ஞானம் அடையமுடியாது. புண்ணிய ஸ்தல தீர்த்தங்களுக்குப் போவதால் ஒரு பிரயோஜனமுமில்லை. சிலர் சரியை கிரியை செய்துதான் ஞானம் அடையவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது ஞானத்தை அடையவிடாது.

(4) சில ஞானத்தில் சகுணோபாசம் செய்துதான் ஞானம் அடையவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அது தப்பு. ஒருவன் ஒரு உருவத்தை நினைத்துக் கண் மூடிக்கொண்டு தியானம் செய்தால் அவ்வுருவம் தோன்றும். விளித்தால் போய்விடும். இது பொய்த்தோற்றம். இது விட்டுவிடவேண்டும். இதனால் ஒரு பயனும் கிடையாது. ஞானமும் உண்டாகாது.

(5) முன்னோர்கள் கட்டுப்பாடு செய்துவைத்த இதிகாச புராணங்களை நம்பி அதன் வழி செல்வோர்களுக்கு ஞானம் ஒரு போதும் வராது. கர்மம் செய்து ஞானம் அடையமுடியாது. கர்மத்தைத் தொலைத்தால் ஞானம் அடையலாம். கர்மம் என்றால் சரியை கிரியை செய்புவர்கள் கர்மவான்கள். சரியை கிரியைவிட்டு

* யாதொரு காரணத்தால் பயம் உண்டாக்குதலே.

உண்மை அறிந்த யோகிகளிடம் அடைந்து உடல் பொருள் ஆவி மூன்றும் தத்தம் செய்து ஞானம் அடையவேண்டும்.

(6) இதைப்போல் ஞாயமில்லாத சங்கதிகள் இன்னும் அநேகம் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகள் பிராமணன் என்று சொல்லப்பட்ட ஆரியன் பிழைப்புக்காகவே கட்டுக்கதை யாக இதிகாச புராணங்கள் எழுதி யிருக்கிறார்கள்.

(7) ஆதலால் கன்மம் என்ற சரியை கிரியைவிட்டு தேகம் அசையாது நிமிர்ந்து உட்கார்ந்து மனம் அலையாமல் இருகண் களைமூடி நிஷ்டை என்ற பாவனைபோல் செய்துகொண்டு வந்தால் பந்தம் விலகி ஞானத்துக்கு வழி யுண்டாக்கும் ஆதலால் ஞானம் அடைய விரும்புவர்கள் தீர்த்த ஸ்தலங்களை நம்பிக் கல் மண் உருவத்தைக் கண்டு எவ்வளவு பூசை செய்தாலும் ஞானம் அடைய முடியாது. இது சத்தியம்.

கோவிந்தன்.

நேயர்களே! முதலாவது பிரிவில் ஆரம்பத்தில் அவ்விஷயங் கள் மௌனகுரு சுவாமி தமக்கு அறிவித்தவை யென்கிறார். மௌனமாகவுள்ளவர் எவ்வாறு இவ்வளவு சங்கதிகளை யறிவித் தாரோ நமக்கு விளங்கவில்லை. எந்த அனுபவ ஞானியேனும் அவ்வாறு சரியை யாதிகளை யடியோடு அனாவசியமென்றும், 5-வது பிரிவில் கூறியபடி இதிகாச புராணங்களால் ஞானம் ஒரு போதும் வராதென்றும், கர்மம் செய்து ஞானமடைய முடியா தென்றும் எங்கேனும் கூறுவரோ என்பதை இதை வாசிப்போரே சிந்தித்துப் பார்க்கலாம்.

அவர் 1, 2, பிரிவுகளில் கூறியுள்ளவை சரிதான். அதைப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆனால் எடுத்ததே எல் லோரும் அம்மார்க்கங்களை யனுஷ்டிக்க முடியாதென்பது உண்மை. வாயால் மட்டும் கூறிக்கொண்டிருக்கலாம். தெய்வ சிந்தனையேனும் வழிபாடேனும் இல்லாமல் பேய்போலலைந்து பொருள்தேடி உண்டுடுத்து உறங்குவதிலேயே காலங்கழிக்கும் சிலர் கோயிலுக்குப் போகும் ஒருவனைக்கண்டால் "அங்கென்ன விருக்கிறது? எல்லாம் நமக்குள்ளே யிருக்கிறது" என்று கூறித் தாம் தமக்குள்ளேயே பகவானைக் கண்டவர்போல் வாய் ஞானம் பேசுகிறார்கள். வாயால்மட்டுமே யிப்படிக் கூறலாமன்றி

இவர்கள் காணப்போவதென்னமோ இல்லை. ஞானிக்கு ஜாதி மத பேதமில்லை யென்பது நூல்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

பின்னால் 3, 4, 5, 6, 7, பிரிவுகளில் கூறப்பட்டவைகளே முழுமையும் தவறென்றும், அவை பூரண சாத்திர ஆராய்ச்சி யில்லாது சரியையாதிகளை யனுஷ்டிக்கும் யாவரையும் கெடுக்கத் தக்க ஆபாசமான துர்ப்போதனைகள் என்றும் கண்டிக்கிறோம். சாத்திர விசாரணை செய்து சரியை யாதிகளின் அவசியத்தையும் உண்மையையுமறிந்தோர் இக்கூற்றைக் கண்டால் இகழ்ந்தொதுக்கித்தள்ளி இதை மொழிவோரின் நிலைமைக்கு இரக்கங் கொள்வர்.

அந்தோ! பெரும்பாலோர் சரியை யாதிகளையே யனுஷ்டிப்போர். ஞான அப்பியாசம் செய்வோரும் ஆரூட ஞானிகளுங்கூட உலகில் கலந்திருக்கிறவரையில் இவற்றை அனுஷ்டிக்கிறார்கள், சாத்திர ஆராய்ச்சி யில்லாது, ஞானமடையும் பக்குவம் வராது; பக்தி மார்க்கத்திலிருப்போரே உலகில் அதிகம். இத்தகைய போதனையை நம்மதப் பிராம்மணர் ஒருவரே கூறுவதைக் கேட்டால் அவர்கள் மயக்கமடைவார்களன்றோ.

கிருஸ்தும்த போதகர்கள் நம்மவர்களில் பாமரர்களை மயக்கித் தம் மதத்திற்கு இழுக்க முயலும்போது யோக ஞானங்களைப் பற்றிப் பேசுவதில்லை. அவற்றைப்பற்றி அவர்கள் மதத்தில் கூறப்படாததால் அவர்களுக்குத் தெரியவுந் தெரியாது. எங்கோ ஒவ்வொருவர் அறிந்து இரகசியத்தில் நம்மத யோகஞான மார்க்கங்களை யனுஷ்டிக்கிறார்கள். ஆனால் அவர்களதை வெளியிடுவதில்லை. வெளியிட்டால் சம்பளம் போய்விடும். மற்றபடி கூலிக்கு மதப் பிரசாரம் செய்யும் கிருஸ்தவர்கள் சரியை கிரியைகள் புராணக் கதைகள் இவற்றில் குற்றங்கூறியே நம்மவர்க்கு நமது மதத்தில் ஐயமுண்டாகச் செய்து பிறகு வேறு உலக ஆசைகளைக் காட்டித் தம் மதத்திற்கு இழுத்துக்கொள்கிறார்கள். சரியையாதிகளின் தன்மையையும் புராணங்களின் அந்தரங்கக் கருத்துக்களையும் அறியாத நம்மவர் மயங்கி விடுகிறார்கள்.

1-வது பிரிவில் தாம் கூறிய 'மனப்பதைப்பு' என்பதற்குப் பொருள் 'யாதொரு காரணத்தால் பயம் உண்டாக்குதலே' என்று கீழே இவர் வரைந்திருக்கிறார். 'மனப்பதைப்பு' என்பதற்கு இவர் அறிந்த அர்த்தம் இதுபோலும். சாதிபேதம்

கூடாது என்கிறார். ஒருவன் எடுத்ததே சாதிபேதத்தை விட்டு விடுவானா? இவர் விட்டுவிட்டாரா? வாய் ஞானம் பேசி யாவரையும் கெடுப்பதற்கா நாம் சாத்திர ஆராய்ச்சி செய்வது?

6-வது பிரிவில் கூறியுள்ளதை நோக்க இவர் அந்தணரல்லர் என்று ஐயமுண்டாகிறது. பெயரின் முடிவில் ஐயர் என விருக்கிறது. 7-வது பிரிவில் "தேகம் அசையாது நிமிர்ந்து உட்கார்ந்து இருகண்களை மூடி நிஷ்டை என்ற பாவனைபோல் செய்து கொண்டு வந்தால் பந்தம் விலகி ஞானத்துக்கு வழியுண்டாக்கும்" என்கிறார். நிஷ்டை என்ற பாவனை எப்படியோ விளங்கவில்லை. எந்த பாவனையை இவர் நிஷ்டை என்று எண்ணியிருக்கிறாரோ நாமறியோம்.

நம்மவர்க்குச் சரியையாதிகளின் அவசியத் தன்மையையும் புராணங்களின் கருத்தையும் தெரியக்காட்டி, பிறமத போதகர்களின் வார்த்தைகளுக்கு அவர்கள் மயங்காவண்ணம் செய்ய வேண்டியது அத்தியாவசியமாயிருக்கும் இக்காலத்தில், இவர் இத்தகைய தீங்கிழைக்கத்தக்க போதனையை நம்மவர்க்குக்கூற முயன்றதைப்பற்றி மிக விசனிப்பதோடு, பிராம்மணராகிய இவர் நமது மதக்கொள்கையைப்பற்றி இத்தகைய பெருந்தவறாக உணர்ந்திருப்பதற்காகப் பின்னும் அதிக விசனமடைகிறோம். உண்மையில் சரியையாதிகள் அத்தியாவசியமேயாகும்.

சரியையாதிகள் ஏன் அத்தியாவசியம்?

கடவுளோடு ஆன்மா இரண்டறக் கலந்து விடுவதாகிய நிலையே எவரும் அடையத்தக்க உயர்வான நித்திய மோக்ஷமாகும். இதற்கு ஞானமே நேரான மார்க்கமாகும். இன்னும் மோக்ஷமடைய நான்கு சாதனங்கள் வேண்டும் என்று கூறப்பட்டது. அவை—1. ஜீவகாருண்யம், 2. ஈசுர பக்தி, 3. பாசவைராக்யம், 4. பிரம்மஞ்ஞானம்.

இந்த நான்கில், மற்றவை யெல்லாமிருந்தாலும் ஈசுரபக்தி ஒன்றின்றேல் பயனில்லை. ஆனால் மற்றவை யொன்றுமின்றி அதிதீவிரமான ஈசுரபக்தி ஒன்று மட்டும் இருந்தால் மோக்ஷம் சித்திக்கும். எப்படியெனில், எல்லாம் வல்ல ஈசுவரனருளால் மற்ற மூன்று சாதனங்களும் ஏககாலத்தில் உடன் சித்திக்கும். கடவுள் சர்வ வல்லமையுடையவர். நாம் எந்த உருவமாகப் பாவித்து உபாசிக்கிறோமோ அந்த உருவமாகக் காட்சியளிக்க

வல்லவர். அவரே பிரத்தியட்சமாக தரிசனமளிக்கும்போது ஏககாலத்தில் ஞானமுண்டாகச் செய்வார். முத்தியுமளிப்பார். அது முடியாதெனின் அவர் சர்வவல்லமை யுடையவர் என்பது பொய்யாகிவிடும். பக்தி ஒன்றினாலேயே ஆறே நாட்களில் முத்திபெற்ற ஸ்ரீ கண்ணப்ப நாயனாரே இதற்கு அத்தாட்சி. இன்னு மனேகருண்டு.

இதனால் மோக்ஷமடைய பக்தி இன்றியமையாததென ஏற்பட்டது. பக்தி என்றால் கடவுளின்மேல் வைக்கும் அன்பு. மனம் ஈசனிடம்பற்றி யுருகவேண்டும். மனமோ அனாதிதொட்டு நாம ரூபமுடைய வஸ்துக்களிடத்திலேயே பற்றுவைத்துப் பழகியது. இச்சையே மனதின் சொரூபம். அந்த இச்சை நாமரூபத்தையே பற்றும். அந்த இச்சை முழுமையும் பகவானிடத்தில் வைப்பதே பக்தியாகும்.

எப்போதும் நாமரூபத்திலேயே நாட்டம் வைக்கும் சுபாவ முடைய மனம் நாமரூப மற்ற கடவுளிடம் எப்படி ஆரம்பத்திலேயே நிலைத்து நிற்கும்? எப்படி அன்பு வைக்கும்? எப்படி ஒரு நிமிடமேனும் அதைச் சிந்திக்கும்? இதற்காகவே சகுண உபாசனையும், சரியை கிரியையாதிகளும் ஏற்பட்டன. மேலே யுள்ள மாடிக்குச் செல்லவேண்டின் ஏககாலத்தில்தாண்டிச் செல்ல முடியாததால் சில படிகளில் ஏறிச்செல்கிறோம். அதைப்போலவே மோக்ஷமாகிய மேடைக்குச் செல்ல சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கும் நான்குபடிகளாம். இவற்றில் ஞானமே நான்காம்படி. நான்காம்படியி லிருந்துதான் நேராகமேடைமேல் கால் வைத்துச் செல்கிறோம். ஆயினும் மற்ற 1, 2, 3-ம் படிகள் உதவாதவை யென்று கூறிவிடலாமா? அது மூடத்தனமல்லவோ? அவற்றைக் கடந்த பின்தானே 4-ம் படியில் ஏறினோம்? நான்காம் படியில் ஏறி விட்டவன் நேராய் மேடைமே லேறிவிடலாமாதலால் அவன் 1, 2, 3, படிகளைக் கவனிக்க வேண்டியதில்லையாயினும், மற்ற எல்லார்க்கும் அவை அவசியமேயாகும். உண்மையில் அப்படிகளி லேறி மேடைமேல் சேர்ந்தவன் அக்கீழ்ப்படிகள் அவசியமல்ல என்று ஒருபோதும் கூறான். ஏனெனில் நாம் முதலில் 1, 2, 3, படிகளில் ஏறித்தான் 4-வது படிக்கு வந்தோம் என்று அவன் அறிவான். இச்சன்மத்தில் ஒருவனுக்கு எடுத்ததே ஞானம் வந்துவிட்டால், அவன் முன் ஜன்மங்களில்

சரியையாதி மூன்று படிகளையும் கடந்து விட்டவனேயாகும் என்று நூல்கள் கூறுகின்றன. அதனால்தான் இச்சன்மத்தில் அவனுக்கு அவற்றில் மனம் செல்லாது ஆரம்பத்திலேயே ஞானப் பியாசத்தில் முயல்கிறான்.

இப்போது நமது கோவிந்தன் என்பவர் கூறுவது 1, 2, 3, படிகளிலேறினால் நீ யொருபோதும் மேடைமேல் போய்ச்சேர மாட்டாய் என்று கூறுவதுபோ லிருக்கிறது. பி. எல் பரீட்சை கொடுத்தால்தான் வக்கீல் வேலைக்குப் போகலாம் என்பது உண் மையே. ஆனால் அதற்குக் கீழுள்ள பரீட்சைகள் அனுவசிய மென்றுவது அவைகளுக்காக வாசித்தால் நீ ஒருபோதும் பி. எல். பரீட்சையில் தேறமாட்டாய் என்றுவது எவரேனும் கூறத் தகுமோ? அப்படிக் கூறுவோர் பரீட்சைகளைப்பற்றிய விஷயங் களையே யறியாதவராகவல்லவோ இருக்கவேண்டும்.

நமது மார்க்கத்தில் கூறப்பட்டுள்ள சரியையாதிகள் ஞான மடையப் பெருஞ் சாதனங்களாக விருக்கின்றன. ஈசுரபக்தி மோக்ஷத்திற்கு இன்றியமையாத சாதனம். அத்தகைய பக்தியை யுண்டாக்கச் சரியையாதிகள் பேருதவியா யிருக்கின்றன. "உருவ மற்ற நம்மை உருவமாகப் பாவித்து வணங்குகிறான் என்று கட வுள் கோபிப்பார்'' என்று கருதுவது அறிவின்மையே யாகும். கடவுள் 'அருவம்' என்று கூறினால், அவரை வரை யறுத்துக் கூறுவதாகும். அவர் 'உருவம் அருவம் உருவாருவம்' என்ற மூன் றுமல்ல—மூன்றுமாம்-யாவுமாம்-இன்னதென்று கூறத்தக்க ஒரு வரம்பில் அடங்கியவரல்ல—அவர் வரம்பற்றவர். வாக்குமனதீதர்.

நாம் ஒரு விக்கிரகரூபத்தை வணங்கினாலும் அந்த உருவத்தைக் குறிப்பாக வைத்துக்கொண்டு அகண்ட பரிபூரணச் சச்சிதானந்த சொரூபியாகிய, எல்லையற்று எங்கும் நிறைந்த பகவானையே துதிக் கின்றோம். "ஓம் செம்பே நமஃ, ஓம் பஞ்சலோகமே நமஃ, ஓம் மனித உருவமே நமஃ, ஓம் கண்மூக்குக் கைகாலுடையவனே நமஃ'' என்று பூஜிப்பதில்லை. "ஓம் அகண்டரூபாய நமஃ, ஓம் நின்மலாய நமஃ, ஓம் சங்கராய நமஃ, ஓம் சச்சிதானந்த சொரூபாய நமஃ'' என்பது முதலிய பரப்பிரம்மத்தின் இலக்ஷணங்களைக் கூறியே துதிக்கின்றோம்.

"ஒருருவம் ஒருநாமம் ஒன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ''

என்று மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினர்.

இந்த உண்மையறியாத மூடரன்றோ நாம் கடவுளை விக்கிரக ரூபமாய் வைத்து வணங்குவது குற்றமெனக் கூறவேண்டும். மேலும் பசுவின் தேகத்தில் பால் எங்கும் வியாபித்திருந்தாலும் முலைக்கண்களின் வழியாக வெளிவருவதுபோல், கடவுளின் அருள் விலாசம் எங்கும் வியாபகமாக விருந்தாலும் விக்ரகங்களினிடம் பிரகாசிக்கும்படி மந்திரம் கிரியைகளின் மூலமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

சரியையாதிகளால் கடவுளிடத்து நாம் வைத்திருக்கும் அன்பை, அபிஷேகம் செய்தல், அலங்காரம் செய்தல், நைவேத்யம் முதலிய உபசரணைகள் செய்தல் முதலிய பலவழிகளில் வெளியிடவும், காலத்தை ஈசுவர சிந்தனையில் செலவழிக்கவும், அனுகூலம் உண்டாகிறது. மனம் அவனைச் சிந்திப்பதிலும், வாக்கு அவனைத் துதிப்பதிலும், அவயவங்கள் அவன் பணி செய்வதிலுமாகத் திரிகரணங்களும் அவன் வழியில் ஈடுபட்டு நிற்கின்றன. இவ்வாற்றால் பக்தி பெருகினால் சித்த சுத்தி யுண்டாகி அவனருளால் ஞானத்திற்கு வேண்டிய சாதனங்களியாவும் தானே யமைந்து ஆன்ம ஞானம் சித்திக்கும் என்பதில் சற்றும் ஐயமின்று. திரிகரணங்களும் அவன் வழிப்பட்டு நாம் அவன்மேல் வைத்த அன்புருவமாய்விடின், அதற்குமேல் ஞானம் என்பதும் மோட்சமென்பதும் மிக்க தூரமில்லை.

உலகில் ஏககாலத்தில் ஞானத்தை யடையத்தக்க அதிகாரம் உடைத்தாயிருப்பது அரிதினுமரிது. ஆதலின் படிப்படியாகவேனும் எந்த அதிகாரியும் ஞானத்தை அடையுமாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகள் வகுக்கப்பட்டுள்ளன. அதனுனே வேதம் அவ்வாறே கிரியா காண்டம் பக்தி காண்டம் ஞான காண்டம் என மூன்றாகக் கூறியது. சமயாசாரிகள் ஆள்வாராதியர் முதலியோரும், 3000 வருடங்கள் சிவராஜயோக ஞானசமாதியிலிருந்த திருமூலர் முதலியோரும் இவற்றை யவசியமெனக் கூறியுள்ளார். மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவரும் "விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான மொருநான்கும்— அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே'' என்று அவைகள் நான்கு படிகள் என்ற விசேஷப் பொருள் விளங்குமாறு கூறி யருளினர்.

நேயர்களே! சுருதிக்கும், இத்தகைய மகான்களுடைய அருள் வாக்குகளுக்கும், அனுபவத்திற்கும் மாறாகக் கூறப்பட்ட

விஷயம் எக்காலத்தில் யார் கூறினும் சரியே—அது முற்றுந் தவறேயாதலின் வெறுத்துத் தள்ளத்தக்கதேயாகும். இத்தகைய தவறான விஷயங்களால் நாம் மயக்கமடையலாகாது. எண்ணிறந்தோர் பக்தி மார்க்கத்தால் மோக்ஷமடைந்திருக்க சரியையாதிகள் ஞானத்தை யளிக்கா வென்ற வார்த்தை யெள்ளளவேனும் நம்பத்தக்கதோ?

தீர்த்தம், ஸ்தல சேவைகள் இவைகளும் பயனற்றவையல்ல; இவைகளெல்லாம் அவரவர்கள் தரத்திற்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டவை. இவைகளும் புண்ணியத்தை யதிகப்படுத்தி, சித்த சுத்தியுண்டாக்கி, படிப்படியாய் ஞான மார்க்கத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும் என்பது திண்ணம்.

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்றார் தாயுமான சுவாமிகள். விரிக்கிற் பெருகும்.

கர்மத்தால் ஒருகாலும் ஞானம் வராதென்று கூறுவதும் பெருந்தவறே. "ஜனனமரணத்திற்குக் காரணமாகிய கர்மத்தைக் கர்மத்தாலேயே யொழிக்கவேண்டும். அதாவது நிஷ்காம கர்மம் சித்த சுத்தியை யளித்து அத்துவாரா ஞானமளிக்கும்" என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார். அதைப்பற்றி நாம் நமது சஞ்சிகையில் வரைந்துவரும் பகவத்கீதை வசனத்தின் 4-வது 5-வது அத்தியாயங்களில் (தை மாசிமீ சஞ்சிகைகளில்) தெளிவாய்க் கூறியிருப்பதைக் காணலாம்.

நண்பர்களே! 'கோவிந்தன்' என்பவர் கூறிய இத்தகைய மொழிகளையும், அன்னிய மதத்தவர் உங்களை மயக்கச் சரியை கிரியைகள் புராணங்களைப்பற்றிக் கூறும் ஆபாசங்களையும் செவியேற்காது எட்ட விலகுங்கள். எல்லாம் வல்ல பரம்பொருள் நல்லருள் புரிவாராக.

ஓம் தத்ஸத்.

மது மாமிசம்

தற்போது உலகில் மாமிசம் சாப்பிடக் கூடியவர்களுக்கு நற்புத்தியாக ஜீவகாருண்யம் முதலானவைகளில்லாம லில்லை. ஆனால் ஜீவகாருண்யம் என்றால் மனிதனுக்குத்தான் ஜீவனிருக்கிறது, அதைத்தான் காப்பாற்றி நல்ல ஸ்திதியில் வைக்கவேண்டுமென்று அநேகர் நினைத்து மிருகங்களிட

முள்ள ஜீவனிடம் காருண்ய மில்லாமல் அவைகளை, கதறக் கதறக்கொன்று மனித ஜீவனின் வயிற்றுப்பசியைத் தணித்து விட்டால் போதுமென்று நினைக்கிறார்கள். இது ஜீவகாருண்ய மாகுமா? ஒருகாலுமாகாது; இப்படி வதைப்பவர்களை ஜீவகாருண்ய மில்லாதவர்க ளென்றால் கோபப்படுகிறார்கள். மிருகங்களை வதைப்பவர்களுக்கு அவற்றில் ஜீவன் இருக்கிறதெனத் தெரியாதா! தெரியும்; ஆனால் ஏன் அப்படித் தெரிந்தும் தெரியாததுபோல் கொன்று மாமிசத்தைச் சாப்பிடுகிறது பழக்கத்திலிருந்து வருகிறதென்பதை ஆராய்வோம்.

தகாதவையானாலும், முப்பாட்டன் செய்ததைப் பாட்டன் செய்வதும், பாட்டன் செய்ததைத் தகப்பன் செய்வதும், தகப்பன் செய்ததைத் தான் செய்கிற தென்பதும் பரம்பரையாய்ச் செய்து வருவது புண்ணியமாகவேயிருக்குமென்ற நம்பிக்கை யாலேயே மிருக ஜீவனை வதைப்பது ஜீவகாருண்யத்திற்கு முற்றிலும் விரோதமென்று தோன்றவில்லை. ஆனால் தகப்பனிடம் நன்னடை யிருந்தால் மகனுக்கு அறிவு எட்டினவுடன் அதைப் பின்பற்ற வேண்டும், கெட்ட நடையிருந்தால் அதை விலக்குவதுடன் தகப்பனையும் நல் வழிக்குக் கொண்டுவர, பிரகலாதனைப் போல் முயல வேண்டும். அதன்றித் தகப்பனுக்குள்ளது தனக்கும் உண்டென்று கெட்ட நடையை மட்டும் பின் பற்றுவதும் நற்குணமிருந்தால் அதை விட்டு விரோதமாய் நடப்பதும் பழக்கத்திலிருக்கிறது. பின்னும் தகப்பன் மாதிரியே தானும் நடக்கவேண்டுமென்று சபதம் பேசுவோர், தகப்பன் நொண்டி நடக்கும் சுபாவமானால் தானும் ஏன் நொண்டி நடப்பதில்லை? தகப்பன் பொட்டையாயிருந்தால் மகன் தன் கண்களை ஏன் பொட்டை யாக்கிக்கொள்கிறதில்லை? இப்படிச் செய்து கொள்ள எப்படிச் சம்மதப்படவில்லையோ, அப்படியே தகப்பன் பரம்பரையில் செய்துவரும் அடாத செயல்களையும் தழுவி நடப்பது ஆகாது. ஆனால் முன்னோர் மேற்கண்டபடி ஜீவகாருண்ய மில்லாமல் மிருகங்களைக் கொலை செய்தல் மாமிசம் புசித்தல் முதலிய பாதகத்தொழிலுக்கு ஆளானது என்ன காரணமென்பதை இனி விவரிப்போம். இதற்கு ஆதி **மதுபானமே யாகும்**. மதுபானம் ஜீவகாருண்யத்தை நீக்குமென்பது கீழ்க்கண்ட திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும்:—

ஓரிடத்தில் உள்ளே போகும்படியான நாலுபாதையுள்ள ஓர் கட்டிடமிருந்தது. ஒரு பாதையில் ஓர் யௌவனஸ்திரீயும், மற்றொன்றில் ஓர் பசுவும், கத்தியும், வேறொன்றில் பக்குவப் படுத்திய மாமிசமும், நாலாவது பாதையில் ஒரு குடத்தில் மதுவும் இருந்தன. ஒருவன் அந்தக் கட்டிடத்திற்குள் அவசியம் செல்லவேண்டியவனாக விருந்தான். முதலாவது ஸ்திரீயிருந்த பாதை வழியாய்ச் செல்லப்போனான். அங்கிருந்த பெண் தன்னைச் சேர்ந்தால்தான் உட் செல்லலாமென்றாள். அதைக்கேட்ட அம்மனிதன் பரஸ்திரீகமனம் மகா பாதகமாயிற்றே,

"பகைபாவ மச்சம் பழியென நான்கு
இகவாவா மில்லிறப்பான் கண்"

என நாயனாரும் கூறியுள்ளார். இது தகாதென அவ்விடத்தை விட்டுப் பசு இருந்த பாதை வழியாய்ப் போகப் போனான். அங்கிருந்த ஒருவன் அவ்விடமிருந்த கத்தியால் பசுவைக் கொன்றால் உட்செல்லலாமென்றான். அதைச் செவியுற்று மனம் பதறி ஜீவஹிம்ஸை பெரும்பாதகமாயிற்றே.

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ் நாண் மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று"

என ஆன்றோருரைத்தபடி இது கூடாதென அவ்வழியை விட்டகன்று வேறொரு வழியில் போக, அங்கிருந்தவன் அவ்விடமிருந்த மாமிசத்தை உண்டால் மாத்திரம் உள்ளே போகலாமென்றான். அதைக்கேட்டு மன வெறுப்படைந்து,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்றபடி புலால் புசிப்பது பெரும்பாவமாயிற்றே; இதுவும் கூடா தென அதை விட்டகன்று கடைசியா யுள்ள பாதை வழியே போவோ மென்று போனான். அவ்விடமிருந்த மதுவைக்குடித்தால்தான் உள்ளே போகலாமென்று அங்குள்ளவன் சொன்னான். உட்செல்லப் போனவன் என் செய்வான் பாவம்! அவனுக்கோ உட்செல்லவேண்டியது அவசியமா யிருக்கிறது; வேறு வழியோ இல்லை. மனக்கலக்கமடைந்து, முன்னுள்ள மூவகைக் குற்றத்தைப் பார்க்கிலும் மதுபானம் அவ்வளவு கெடுதலல்ல வென்று ஒருவாறு தீர்மானித்துக் குடித்தாவது போவோமென்று முடிவு செய்தான். அப்படியே குடித்தான். போதை உண்டாயிற்று. ஆவேசம் வந்தவன் போல், யார் நமக்கு நிகர், எதையும் செய்யலாம், பாவமாவது புண்ணியமாவது என்று மனத்துணிபு கொண்டவனானான். உடனே மாமி சத்தைப் புசித்தான். அத்துடன் நில்லாமல் பசுவையும் கொன்று ஸ்திரீயை யும் கற்பழித்தான். இவ்வாறு இவன் கெட்டதற்குக் காரணம் மதுபானமே. தற்காலத்திலும் மதுபானக் கடைகளுக்குப் பக்கத்தில் சாக்கணக் கடை களிருப்பது யாவருமறிந்ததே.

நண்பர்காள்! தற்போது சுபாவமாய் மாமிசம் சாப்பிட்டு வரும் ஒரு வனை ஒருகோழியின் கழுத்தில் வாயை வைத்து அதின் இரத்தத்தை உறிஞ்சச் சொன்னால் மனந்துணிந்து அதைச்செய்ய உடன் படுவானா? மாட்டான். இப்படிச் செய்ய மனமிசையாத உத்தமன், வீரன், காட்டேரி, என்னும் சில தேவதைகளுக்கு ஜீவராசிகளைப் பலி கொடுத்தால் மட்டும் பிரீதி யென்றெண்ணி அதன் காரணமாய் ஆவேச முண்டாக்கிக்கொண்டு அந்த நேரத்தில், மாடு, ஆடு, கோழி, முதலானவைகளை வெட்டவும், வாயால் கௌவி இரத்தத்தை உறிஞ்சவும் துணிகிறான். ஷை தேவதைகள் போல் உண்டாக்கிக்கொண்ட ஆவேசத்தைப் போன்ற ஆவேசத்தை உண்டு பண்ணக்கூடிய மதுவைக்குடித்ததும் எதைத்தான் செய்யத்துணிய மாட்டான்?

ஆனல் இக்கொடிய பானத்தால் சகல பாவத்தொழில்களும் விளைகின்றன வெனத் தெரிந்த அறிஞர்கள் மதுபானத்தையே விலக்கி விட்டார்கள். அதனல் உண்டான ஜீவவதை செய்து புசிக்கும் மாமிசத்தை விட்டாரில்லை. ஆகையால் மதுபானம் செய்பவர்கள் அதனலுண்டாகும் கெடுதல்களனைத்தையும் தெரிந்து மதுபானத்தை விலக்கவும், பானத்தால் உண்டான மாமிசம் புசித்தலை விலக்கவும் முயல்வோமாகில் நம் தாய்நாட்டினர் ஜீவகாருண்யத்தைக் கைக்கொள்ளும் நீதியாகும்.

ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப்
தமிழ் சித்த வைத்தியம், மாயவரம்.

குறிப்பு:—சிலர் மனிதருக்கு மட்டுமே ஆன்மாவுண்டு; மற்ற ஜெந்துக்களுக்குப் பகுத்தறிவில்லை யாதலால் ஆன்மா இல்லை என்ற கொள்கையுடையவர்களாக விருக்கிறார்கள். இது ஆன்மாவென்றால் என்ன வென்பதையே அறியாக்குறை யாகும். பகுத்தறிவு மற்ற ஜந்துக்களுக்கு அடியோடில்லாது போகவில்லை. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பகவான் பிறவியிலேயே யவற்றிற் களித்திருக்கிறார். அதை நாம் இயற்கை யறிவென்கிறோம். மனிதனுக்குப் பிறந்த உடனே அவ்வளவு அறிவு கூட இல்லை. அப்படியாயின் குழந்தைகளுக்கு ஆன்மா இல்லையென்று அர்த்தமோ? ஆன்மாவிற்கு ஆறறிவு உண்டு. சத்தம், பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்றவற்றை யுணரும் ஐந்தறிவுகளும் மிருகங்களுக்குண்டு. மனிதனுக்கு மட்டும் பகுத்தறிவாகிய ஆறாவதறிவு முண்டு. ஆனல் பிறந்த உடனே அவை யுண்டா யிருப்பதில்லை. அப்போது பரிச அறிவு ஒன்று மட்டுமே யுண்டு. பிறகே ஒவ்வொன்றாக உண்டாகின்றன. மரம் செடி முதலிய எதெது வளர்கிறதோ அதற்கெல்லாம் ஓரறிவு மட்டும் உண்டு. ஆன்மாவிருந்தாலே அறிவுண்டு. சாதாரண புத்தியைக்கொண்டு பார்த்தாலே உண்மை விளங்கு மன்றோ. பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் அடிபட்டால் நோகாதோ; ஒரு உயிருக்கு வருத்தத்தை யுண்டாக்குவதே பாவமன்றோ. பட்சி மிருகம் முதலியவற்றிற்கு ஆன்மா இல்லையென்றும் கருதுவது பெரிய அஞ்ஞானமான மூடமதியே யாகும்.

மதுபானத்திற்கும் மற்ற பொய், கொலை, களவு, காமம் நான்கிற்கும் ஒரு வித்தியாசமுண்டு. எவ்வாறெனின் மற்ற நான்கு செய்கைகளும் அவற்றைச் செய்ததே பாவத்தையுண்டாக்கி விடுகின்றன. மதுவோ அதை யருந்துதல்மாத்திரத்தாலேயே பாவத்தையுண்டாக்காது. ஆனல் மதுவையருந்தியபின் புத்தி சபலித்து மனம் கடினத்தன்மையடைய நேரின் அப்போது சிறியோர், பெரியோர், பாபம், புண்ணியம், நல்லது, கெட்டது தெரியாமல் கெட்ட காரியங்களைச் செய்கிறான். அக்காரியங்களால்தான் பாபம் உண்டாகிறது. மேற்கூறப்பட்ட திருஷ்டாந்தக் கதையிலேயே அது நிரூபிக்கப்படுகிறது. மதுபானம் செய்து மனதைக் கலவரமடையாது வயப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கச் சக்தியுடையோர் மிகத் துர்லபம். அதனற்றான் மதுபானமும் அப் பாதகங்களில் ஒன்றெனக் கூறப்பட்டது.

பத்திரிகாசிரியர்.

'முருகம்மையார்'

(1) "ஒருமுரு காவென் றுள்ளங் குளிர உவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்ப ரையன்னனே
தருமுரு காவென்று தாம்புலம் பாநிற்ப தையல்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவரும் சேவகனே"

என்று நக்கீரர் பாடியதே அம்மையார் முருகன் பக்தியிற் சிறந்த மாதென்பதையும் நக்கீரற்கு வெகுகாலத்திற்கு முன்னர் ஜீவித்திருந்தனரென்பதையும் தெரிவிக்கும்.

(2) இந்த அம்மையாரின் தாய்தந்தையர் வைசிய குலத்தவர். வெகு நாள் வரையிலும் மக்கட்பேறின்றி வருந்தினர். சோதிடவல்லவர் முருகன் கிருபையினால் சந்தானம் கிடைக்கக்கூடுமென்று செட்டியாருக்குணர்த்தினர். அதுமுதல் அவர் கந்தன் ஆலயங்கள்தோறும் சென்று வழிபடுவதும், செவ்வாய், சஷ்டி விரதங்களைக் கைக்கொண்டு அனுஷ்டிப்பதுமாய் வாழ்நாள் கழித்தனர். கடைசியாகக் கருணாநிதியின் அருட்பிரசாதமென ஒரு மகளைப் பெற்றனர். முருகன் பூசையின் தவப்பயன் என்று அடிக்கடி அறிவுறுத்தற்பொருட்டு இம்மகவுக்கு 'முருகம்மை' என நாமகரணம் செய்தனர்.

(3) நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த குழவிக்கும் கந்தன் பால் அன்பு கமழக் கண்டனர். அவ்வம்மையார் சிவபுராணக் கதைகளைக் கற்றுணர்வதில் மிகுந்த ஆவலைக் காண்பித்தனர். இத்தகைய மதவொழுக்கமும் ஆசாரமும் அவரிடம் பல்கிப் பெருகவேண்டிய ஆதரவு தாய்தந்தையர் அமைத்துவைத்தனர். அவளுக்குக் கலியாணப் பருவம் கிட்டியது. தாய்தந்தையரின் பழக்கத்தாலும் தன் அன்பின் பெருக்கினாலும் அவள் எப்பொழுதும் முருகா முருகா என்று நாத் தடித்துத் தழும்பச்சொல்லும் தகைமை உடையவளாயினள்.

(4) தன் குலத்திற் கிசைந்த மணமகன் ஒருவனைத் தேர்ந்தெடுக்கப் பல முயற்சியும் செய்தும் பயன்படாது காலந்தாழ்த்தியதால் அம்மையாரின் தாய்தந்தையர் மனம் தளர்ந்தனர். உறவினர் பலரும் இம்மங்கை 'முருகா முருகா' என்று சொல்லியவண்ண மிருந்ததைக் கண்டே இவளை மருமகளாகக்கொள்ள மனமில்லாதிருந்தனர். அப்போது தாய்தந்தையர்களை இளமைப்பிராயத்திலே இழந்த ஓர் செட்டி மணம்செய்துகொள்ள விரும்பி இப்பெண்ணை நாடிவந்தனன். அயலார் பலபடியாகக் கூறிய குற்றங்களைப் பாராட்டவில்லை. இச்செட்டியார் பெயர் தனஞ்செயன் செட்டி. தனஞ்செயன் செட்டிக்கும் முருகம்மைக்கும் திருவருளை முன்னிட்டு மணம் நடைபெற்றது.

(5) மணமகனோடு புக்ககம்சென்று இல்லறம் வழுவா தொழுகிவரும் நாளில் தனஞ்சயன் செட்டிக்கு வியாபார வருவாய் குறைந்து வர

லாயிற்று. வணிகர்களின் நிலை 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதே. தனஞ்செயன் செட்டி சிறியவனாயினும் தைரியம் மிகுதியும் உள்ளவன். பணம் சேர்ப்பதில் மிக்க கெட்டிக்காரன். இழந்த திரவியத்தை ஈடு செய்யச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். கடல்தாண்டித் தீவாந்தரங்கட்குச் சென்று வியாபாரம் செய்ய விரும்பிய ஒரு நண்பனைச் சேர்ந்தான். அவனுக்காகத் தானே வெளிநாடுபோய்க் காரியம் பார்ப்பதாகவும் அதற்காக ஒருபங்கு லாபம் அதிகமாகக் கிடைக்கவும் ஏற்பாடமைத்து, மனைவியிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அவள் பணத்தாசையில் விருப்பம்வைக்காதவளேனும் கணவனைப் பிரிந்திருக்க மனமாறாதவளாயினள். பெண் பிள்ளைகளைக் கப்பலில் அழைத்துப்போவது அக்கால வழக்கத்திற்கு உரித்தாயிராததோடு வைதீக மார்க்கத்திற்கும் விரோதமாயிருந்தது.

(6) முருகம்மையாரோ கொஞ்சம் பிடிவாதமுள்ளவர். தானுண்டு தன் கணவனுண்டு தான் வழிபடுங் கடவுள் முருகனுண்டு. வேறொன்றையும் அறியாள், கவனியாள். நாத்திமுதலியவர்க்குரிய பணிவிடையைச் செய்தாளேனும் அவைகளில் பற்றில்லாதவளா யிருந்தனள். இதனால் நமது அம்மையாருக்கும் தனஞ்செயன் செட்டியின் உறவினர் பலருக்கும் கேண்மை பெரிதும் குறைவு. நெருங்கிய உறவினர் வகையில், பெண் எடுக்காத மனத்தாபமுள்ளவர்களாயிருந்த உறவினர் நமது அம்மையாரிடம் உரிமை காட்டினாரில்லை. பலபடி பேசுவானேன். சமயம் வந்துழி அம்மையாருக்குச் சுருக்குக் காட்டவேண்டுமென்ற எண்ணம் உறவினர் பலர் மனத்திலும் ஆழ்ந்து வேரூன்றியது.

(7) இப்படியிருக்கும் தன்மையைத் தனஞ்செயன் செட்டி நன்கு அறிவர். மனைவியிடம் நல்லெண்ணம் நிரம்ப உள்ளவர். தன் உயிர்த்துணைவியென அவரை மனமாற அறிந்தவர். மேலும் அம்மையார் தொட்ட மண் பொன்னாகும். வாய்மொழியோ தேன்மொழியாகும். தான் வெளிநாடு போவது தெரிந்தால் மனம் பொருள் என நினைந்து முருகன் என்ற வேலையாளை வீட்டைக் கவனித்துக்கொள்ள அமைத்து வெளியே போய்வருகிறேன் என்று மனைவியிடம் கூறிக் கப்பலேறி வியாபாரம் நிமித்தமாய் தீவாந்தரயாத்திரை போயினர். ஒரு நாள் இரண்டு நாள் கணவன் வீடு திரும்பா திருக்கவே, முருகம்மையார் கடவுளர் முன் தோத்திரம் செய்த வண்ணமாய் ஒரே நிலையில் இருந்தனள். வாய்விட்டுக் குறை கூறினள். இதைக் கேட்ட முருகன் என்ற வேலைக்காரன் செட்டியார் வெளியூர் ஏகினர். வரச் சிலகாலம் தாழ்க்கும். கவலைப்படுவதில் பயன் ஒன்றுமிலது என்று சொன்னதைத் தெய்வவாக்கென நம்பி, கணவன் பிரிவைக் கொஞ்சமும் சகியாது அவன் வரவையே நினைந்தவண்ணமாய் அன்னபானாதிகளில் அவா இல்லாது தேகம் மெலிவுற்றுச் சர்வகாலமும் முருகா வா முருகா போ, முருகா போதும், முருகா என்ன விசேஷம் என்று யாருடன் உசாவும்போதும் பேசும்போதும் முருகா என்ற வார்த்தையையே கூட்டிப் பேசிவந்தனர். இதுகண்ட உறவினர் 'தனஞ்செய'செட்டியார் மனைவிக்குப் புத்தி

சுவாதீனம் இல்லையென்றும் முருகன் முருகா என்று கூறுவதால் எப்பொழுதும் வேலைக்காரனாகிய முருகனிடம் பிரேமை யுள்ளாள் என்றும் தீய வெண்ணம் கொண்டனர். உடம்பு மெலிவதைக் கண்டு சில சமயங்களில் பரிதபித்தனர். எல்லாவற்றிற்கும் முருகன் இருக்கிறான் என்ற வார்த்தையைக் கேட்டவர் எவரும் துஷ்ட எண்ணத்தில் அழுத்தம்கொண்டனர். இனி இவள் நம் குலத்திற்குக் கேடுவிளைவிப்பாள். இவளை விலக்கி வைக்க ஏற்பாடு செய்வதே தகுதி எனத் தீர்மானித்துத் தனஞ்செயன் செட்டியின் வரவை எதிர்பார்த்திருந்தனர்.

(8) ஒன்று, இரண்டு, மூன்றுநான்கு, ஐந்தாறு மாதங்களுமாயின. செட்டி வரவில்லை. இன்று வருவார் நாளைவருவார் என்ற வதந்தி ஊரெங்கும் பரவிற்று. இந்நிகழ்ச்சி ஒன்றுமறியாள் நமது அம்மையார். வந்தார் செட்டியார். வீடு புகுந்தார். மனைவியின் நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினார். கணவனைக் கண்ட அம்மையார் முருகா க்ஷேமமா? முருகா ஏன் சொல்லாது சென்றது? முருகா நான் தனியே யிருக்கவிட்டுச் செல்லலாமா? என்று கேட்பதோடு ஆநந்தக் கண்ணீர் பெருக்கியவண்ணமாய் உணவுப்பொருள்களைத் தயாரிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தனள். இதற்குள் உறவினர் பலர் செட்டியாரைக்கண்டு உசாவ வந்தனர். நெருங்கிய உறவினர் தங்கள் தீய எண்ணத்தை வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதென்னச் செட்டியார் மனத்தில் விஷமாகத் தீட்டினர். செட்டியாருக்கு மனைவியிடம் உள்ள அன்பின் மிகுதியால் இத்தீக்கோட்களைக் காதில் கொண்டாரில்லை. ஒன்று இரண்டு நாளாயிற்று. செட்டியார் வேற்று நாடு சென்ற நாள்முதலாக முருகா முருகா என்று பேசிய நாப்பழக்கத்தைச் சுட்டிக்காட்டி முருகன் என்ற வேலைக்காரனிடம் அம்மையாருக்குப் பிரேமை உளது என்று சாலவும் வற்புறுத்தினர்.

(9) "கலைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்" என்ற பழமொழிக்குச் சான்றாகச் செட்டியார் தன் மனைவியை நோக்கி இனி முருகன் என்ற வார்த்தையைப் பேசொணாதெனக் கட்டளையிட, இல்லை முருகா என்று பதில் பகரக்கண்ட கணவனுக்குப் பொறாமை (Jealousy) என்ற பேய் உடனே பிடித்தது. வெறிபிடித்தவனெனப் பேசி இனி முருகன் என்று பகருவையேல் உன் கையைத் துணிப்பேன் என்று சீறினான். அம்மையார் நடுக்கங்கொண்டனர். "உமது மனதிற்கு விரோதமாகிய முருகன் பெயரை இனிப் பகரேன்" முருகா என்று கடைசியில் சேர்த்து மறுமொழி கூறினள். பொறாமைப்பேய் தீயெனச் சொலிக்கக் கண்சிவக்க, கைகால் நடுங்க, அருகாமையிலிருந்த வாளினால் அம்மையாரின் வலக் கையை துண்டித்தெறிந்தனன். இரத்த வெள்ளம் பெருகி வீழ்ந்தோட அம்மையார் மனந்தாளாது என்ன காரணத்தால் முருகா எனக்கு இத்தண்டனை யென்ன, அவன் உன் முருகனே உனக்குக் கைதரக் காண் என்ன, உடனே அம்மையார் தன் கற்பின் பெருமையைத் தன் நாயகன் காண முருகா, முருகா, முருகா என்று மும்முறை கூவ, ஆதிமூலமே என்று அல

றிய கஜேந்திரனுக்குத் திருமால் அந்நாள் அருளியவாறு, மருகனுகிய முருகனும் முதல் முருகா என்றலும் மயில்மேல்வந்தும், மறுமுருகா என்றலும் கைவளரச்செய்தும், மூன்றுமுறை முருகா என்றலும் யாது தேவையம்மா? என வினவா நின்றனர். பரந்த திருமுகப் பொலிவைக்கண்ட முருகம்மையார் பரவசமாயினர். ஞானப்பொலிவு உற்றனர். என் கணவன் பணமே பெரிதென்று தீச்சங்கை கொண்டவரா யிருத்தல் நின்தகைமைக் குற்றதோ என இறைஞ்ச, தனஞ்சயன் செட்டியை கடவுள் நோக்கிய தருணமே, முதிர்ந்த சிவபோதம் பெற்றான். பதம்விழுந்து போற்றாநின்றனன். அவனையும் ஆட்கொள வேண்டியவணமே, வாமனர் பலியிடம் பெற்றதுபோல், அன்னுனிடமிருந்து திரவிய மனைத்தையும் அவன் தரத்தான் பெற்றுச் செட்டியைத் தன் அடியவனுய்க் கொண்டனர்.

பின்னர் முருகக்கடவுள் திருவுருமறைய முருகம்மையாரும் தனஞ்சயன் செட்டியும் வாழ்நாட்களைக் குகன் திருப்பணிகளில் செலுத்தி முருகன் திருவடி நிழலில் சாயுஜ்யமடைந்தனர்.

இக்கதை புராணக்கதை யாகாதென நக்கீரர் மேற்கோளால் விளங்கும். இது பகவந்நாம விசேஷத்தின் கீர்த்தியை விளக்குகின்றது. கோள் கேட்கும் குணத்தின் தீமையின் சிறுமையை விரிக்கின்றதெனப் படிப்பவர் யாருக்கும் நன்கு புலனும்.

N. S. இராமச்சந்திரய்யர், B. A., L. T.
முத்தியால்பேட்டை ஹை ஸ்கூல், சென்னை.

புராதன இந்திய நன்னுடு

(276-ம் பக்கத் தொடர்ச்சி)

7. நிற்க, நமது புராதன இந்தியாவில் நீர்நில வளப்பங்களுக் கேற்பவும், பருவங்களுக் கேற்பவும் தக்க விளைபொருள்களை விதைத்து மிகுந்த பயனடைந்தனர். விளைபொருள்கட்கு முட்டுப்பாடு யாதொன்று மில்லாதிருக்கவே, நம்நாட்டார் கைத்தொழில்களையும் ஏற்றவாறு விருத்திசெய்யத் தலைப்பட்டனர். மெல்லியனவாயும் சற்று முரடானவையாயும் வேண்டுவோர்க்கு வேண்டுவன போன்று ஆடை நெய்ய ஸ்திரீகள், பாலியர், வயோதிகர், ஆகியயாவரும் கற்றிருந்தனர். ஆடவர்களிலும், பெண்பாலார் மிகுதியும் அத்தொழிலைக் கற்றுத் தங்கள் ஓய்வு நேரங்களில் வேலைசெய்து தக்க வூதியமும் பெற்றனர்.

8. அன்றியும், அக்காலத்து வேண்டுமென்றே வளர்க்கப்பட்ட பல கானகங்களில் கிடைத்த மரங்களைக் கொண்டு மரக்கலங்கள் செய்யவும் சிலர் தொழில் கற்றிருந்தனர். இக்காலத்து ஆகாயவெளியே பறந்து செல்லும் ஆகாயக் கப்பலைப்போல் அக்காலத்தும் கண்ணிமைப் பொழுதுக்குள் நூற்றுக் கணக்கான மைல்கள் செல்லும்படி தக்க சூத்திரங்களு

டன், குதிரைபோன்றும், இரதம் போன்றும், ஆகாயக்கலங்களும் செய்யப்பட்டு வந்தன. உதாரணமாக, நாம் இராமாயணத்தில் குபேரன் புஷ்பகவிமானம் ஒரு விநாடிக்குள் பலயோசனைகள், ஆகாயகமனஞ் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். இவைகளினால் புராதன இந்தியா கைத்தொழில்களில் மிகவும் சிறந்திலங்கியது என்று அறியலாம்.

9. இஃதன்றி, இப்பொழுது, உலகமெங்கும் சர்வசாதாரணமாய் வழங்கப்படும் 'சர்க்கரை' என்னும் பதார்த்தம் ஆதியில் நம்மிந்தியாவில்தான் கண்டு பிடிக்கப்பட்டது என்பதற்குத் தக்க சான்றுகள் பலவுள. 'சர்க்கரை' யென்பது ஒரு வடமொழிச்சொல். அது ஆதிக்கிரந்தங்களில் பல சந்தர்ப்பங்களில் காணப்படுவதுமன்றிக் கிரேக்கு, பாரஸீகம், ய்வனம் முதலிய நாட்டுப் பாஷைகளிலும் காணப்படுகின்றது.

10. மேலும், நீலிச்சாயம் விசேஷமாக வகப்படும் அவுரி என்ற பச்சிலையும் இத்தேசத்தில்தான் முதலில் கண்டு பிடிக்கப்பட்டது. பருத்தியும் முதலில் இங்குத்தான் பயிரிடப்பட்டது.

11. இதுவுமன்றி, முத்துக்குளித்தல், இரத்தினம், முதலிய மணிகளை வெட்டி யெடுத்துச் சுத்தம்செய்தல் முதலிய பல கைத்தொழில்களும் விருத்தி செய்யப்பட்டன. இவைகளை யெல்லாம் தவிர, மானிடராவார்க்குச் சுகமே ஜீவனம் செய்வதற்கு இன்றியமையாத பலவேறு வகைத்தான கைத்தொழில்களும் நம்மிந்தியாவில் ஆர்வத்துடன் வளர்க்கப்பட்டன.

பிற்க, வாணிபத்தை யெடுத்துக் கொள்வோம். அதிலும் முன்பு குறையொன்று மில்லை. ஏராளமான விளைபொருள்களும், அவைகளுக்கேற்றவாறு கைத்தொழில்களும் மலிந்துகிடந்த இந்தியாவில் வாணிபத்தில் ஏதாகிலும் குறையுண்டு என்று எவ்வாறு சொல்லலாம். மரக்கலம் செய்தற்றொழில் அந்நாளில் பல்வகைத்தானும் விருத்தி செய்யப்பட்டிருந்ததால் போக்கு வரவுக்குரிய முக்கிய சாதனம் ஏற்பட்டிருந்தது. இந்தியாவின் விளைபொருள்களையும், விசேஷமான கைத்தொழில்களையும் கேள்வியுற்ற கிரேக்கர், பாரஸீகர், உரோமர், யவனர், சீனர் முதலியயாவரும் இந்தியாவுடன் போக்குவரவும் வியாபாரமும் செய்யத் தலைப்பட்டனர். நாட்பல கடக்க, இந்தியாவுக்கும் மேற்கூறப்பட்ட தேயங்கட்கும் மிகுதியாகப் போக்குவரவும் வியாபாரமும் ஏற்படலாயின. கிரேக்கர் முதலாயினோர் இந்தியர்களிட மிருந்து பலவகைக் கைத் தொழில்களையும் கற்றது மன்றி, மிளகு, வாசனைத் திரவியங்கள், சுகந்த தைலங்கள், முத்து, இரத்தினம், முதலியவைகளை வாங்கிக்கொண்டு வியாபாரமும் செய்யலாயினர். இவ்வாறு நம் புராதன இந்தியாவில் வாணிபமும் மிகச்செழிக்க, குடிவளக் தழைத்துக் கோல்வளம் ஓங்கலாயிற்று.

நேயர்களே! அறிஞர்களே! இப்பொழுது நமது இந்தியதேசத்தின் புராதனக் கல்வியையும் நாகரீகத்தையும் சற்று ஆராய்வாம்.

அகண்டமாம் இப்பூவுலகின் கண் நிலைபெற்றுள்ள ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாகவுள்ள சகலவுயிர்களினும் மனிதனே மேம்பட்டவன். அஃதெவ்வாறெனில், ஏனைய உயிர்களின் புத்திகோசரத்துக்கும் மனிதனது புத்திகோசரத்துக்கும் ஒரு முக்கியவேறுபாடு உண்டு. அதாவது மனிதனுக்குப் பகுத்தறிவு (அல்லது பகுத்துப் பார்த்தற்குரியசக்தி) ஆறுமறிவு ஒன்று உண்டு. அதுதான் மனிதனுக்கு அவ்வளவு சிறப்பைத் தருவது. மேற் சொல்லப்பட்ட அப்பகுத்தறிவு தானும் கல்வி, கேள்வி, நற்றகை சான்ற பெரியோரது சேர்க்கை, நல்லோருடன் கூட்டுறவு ஆதியவற்றாற் பெரிதும் விருத்தி யடைகின்றது. ஆகிலும் இவைகளில் பெரும்பாலும், கல்விகேள்வி என்பன விரண்டே அப்பகுத்தறிவை விருத்தி செய்ய, மனிதன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற புருஷார்த்தங்கள் நான்கினையும் எய்துவன். ஆதலால்தான் கல்விக்கு மிகுந்தபெருமை இந்நாளும் நிலவுகின்றது.

நிற்க, நமது முன்னோராகிய இந்தியர் இவ்வகைத்தான கல்வியின் பெரும்பயனையும், 'கல்வி கரையில, கற்பவர் நாட்சில'என்பதையும் நன்கு அறிந்தவராதலின் இக்காலத்து நாகரீக விந்தியர் போலன்றித் தமது தாய்ப் பாஷையிலுள்ள முக்கிய கிரந்தங்களைக் கசடறக்கற்று, அந்நூற்களில் நுவன்றபடி முறைபிறழாது ஒழுகியும் வந்தனர். இதனால் நமது இந்தியர் கல்வியில் மிகுதியும் வல்லுநர் ஆயினர்.

தவிர இக்காலத்துக் கல்விபோலன்றி அக்காலத்துக் கல்வியினால் பல பெருங்குணங்கள் பால்யர்களுக்கு அருங்கலன்களா யமைந்தன. முதலில் கல்வியைக் கற்கும்போது உபாத்தியாயரிடத் துண்டாகும் பயமும், கஷ்டமும், அவர்களுக்குத் தக்கவயது வந்தக்கால் பொறுமையையும், பக்தியையும் தரும். இவையன்றி அக்காலத்துப் படிப்பால் திருஷ்டிபூர்வமாய் விஷயங்களை உணரும் சக்தியும், தேகத்திற்குத் திண்மையும், சுறுசுறுப்பும், மனவலியும் உண்டாயின. இவைகளினால் அக்காலத்துக்கல்வியின் பெருமை நன்கு விளங்கும். இளமையிலேயே குழந்தைகட்கு நல்லறிவூட்டுவதினும் சிறந்தது யாதுளது.

பார்ப்பனக் குழந்தைகட்கு முதலில் சிறுகதைகள், பெருங்கதைகள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளை முறைப்படி குருமார் ஓதுவிப்பார். உபநயனம் முதலியவை ஆகிய பின்னர் வேதம், வேதாங்கம், முதலிய ஆறு சாத்திரங்களையும் ஓதுவிப்பர். இக்காலத்திற் போன்று புஸ்தகங்கள் அதிக மில்லாததால் எல்லாச் சீடர்களும் முறைபோட்டு மனப்பாடம்தான் செய்து கல்விகற்பர். இதனால் பாலியர்களுக்கு இளமையிலிருந்தே ஞாபகசக்தி விருத்தியாம். மேற்சொன்னவைகள், அந்தணச் சிறுவர்க்குச் சிறப்பா யுரித்தாவனவாம்.

மற்ற மூன்று வருணத்தினருக்கும் சிற்பம், வியாபாரம் முதலிய தொழில்கள் தான். இவை தவிர, அக்காலத்துக் கல்வியைப் பின்னுமாராயப்

புகின், ஜோதிடம், கணிதம், வானசாஸ்திரம் முதலியவைகளும் போதிக்கப்பட்டன வென்பது நன்கு விளங்கும். இக்காலத்து அபூர்வமாகவழங்கப்படும் க்ஷேத்திரகணிதம், திரிகோணசாத்திரம் (டிரிக்னுமெட்ரி,) முதலியனவும் அக்காலத்தில் இருந்தன.

தவிரவும், வடநாட்டில் எப்படி ஸம்ஸ்கிருதம் பரவி நின்றதோ அதே போல தென்னாட்டிலும் தமிழ் மிகப்பரவியிருந்தது. அகத்தியர் தென்னாட்டுக்கு வருவதற்கு முன்னரே வழங்கப்பட்ட தமிழ், அவர் வந்தபிறகு இலக்கணத்தினால் பெருமை யுறலாயிற்று. நாட்கள் பல கடக்கவும் முதல், இடை, கடை என்ற மூன்று தமிழ்ச் சங்கங்கள் வெவ்வேறு காலவளவிற்குள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை தென்னாட்டிலிருந்து தமிழாராய்ந்த காலத்தில் தமிழ் வடநாட்டில் பரவினதன்றி, சீனம் முதலிய தேசங்களிலும் வழங்கப்படுவ தாயிற்று. தமிழிலும் பல பெருங்காப்பியங்களும் மானிடராவார்க்கு இகத்திலும் பரத்திலும் நன்மை பயப்பனவாகிய பல நூற்களும் இயற்றப்பட்டன. இவைகளைக் கற்றுத் தமிழரும் கல்வியில் மிகுந்த தேர்ச்சியுற்றனர். ஜோதிடம் முதலியன பலவும் இயற்றப்பட்டன. உதாரணமாக, இடைக்காடர் என்றவர் ஜோதிடத்தில் மிக வல்லவரென்றும், ஒருகாலத்தில் பஞ்சத்தினின்றும் மன்னுயிரைக் காக்கும் பொருட்டு நவக்கிரகங்களையே மழை பெய்யும்படி செய்தனரென்றும் நாம் அறிகிறோம்.

நிற்க, சிற்பம் முதலிய சாஸ்திரங்களும், பல வியற்றப்பட்டன. இதனால் தமிழ்நாட்டிலும் வடநாட்டிலும் சிற்பசாஸ்திரத்தைக் கற்க ஒரு முக்கிய சாதன முண்டாயிற்று. தக்க காலவளவில் இந்தியச் சிற்பிகள் எங்கும் புகழ்பெறலாயினர்.

இப்பொழுது, பெண்கல்வியை எடுத்துக் கொள்வாம். ஆடவர்களைப் போல் பெண்களும் அக்காலத்துக் கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு ஐயமே இல்லை. ஔவைபோன்ற பல மூதாட்டிகள் நமது நாட்டில் இருந்திருக்கின்றனர். ஆனால் இக்காலத்துப்போல் அவர்கள் கல்விகற்றதினால் சிறிதும் அகம்பாவ மடையவில்லை. தமது கொழுநர்க்குச் செய்யவேண்டிய சிசுருஷை முதலியவைகளைச் சாஸ்திரீக முறைப்படி வழுவின்றிச் செயயலாயினர். இதனால் ஆங்கில நாகரிகத்திற்குப் பின்பு தான் பெண்கல்வியின் இன்றியமையாமை நமக்குப் புலப்பட்டது என்று சொல்வது அறிவீனமாகும் என்பது நன்கு விளங்கும். பிற்காலத்தில் இராஜரீக மாறுபாட்டால் பெண்கல்வி குன்றியதன்றி முதலில் இல்லாமலில்லை.

நேயர்காள்! இப்பொழுது நமது மூன்றும் பிரிவினையை எடுத்து ஆராயப்புகுவாம். இவ்விந்தியா நற்குலக் கற்பரசிகட்கு மிகுதியும் பெயர் வாய்ந்த நாடு. கற்பின் திண்மையும் பயனும் முற்றுமுணர்ந்த நாடு. தகை சான்ற பெண்மணிகள் தவமகளிராய் வாழ்ந்த நாடு. கோதற்ற குணமங்கையர் கொழுநரைப் பேணி நற்பதமடைந்தநாடு. அம்மங்கையர் திலகங்

களால்தான் நம்நாடும் நாமும் இன்றளவும் உண்டுபேத்துக் கொண்டாட்டத்துடன் இருப்பது. ஒவ்வொரு மாதரசியின் பெயரையும் சொல்வதென்பது இயலாதது.

நிற்க, தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தமது பொய்யாக்கிளவியாகிய திருக்குறளில் பெண் என்பாளை யறிவதெங்ஙன மென்பதைப் பின் வரும் திருக்குறளால் கூறியுள்ளார், அதாவது,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்பது.

நமது புராதன காலத்துப் பெண்களிடம் இக் குணங்கள் யாவும் வதிந்தனவென்று சொல்லலாம். உதாரணமாக, நளாயனியையும், ஜமதக்னி முனிவரின் பாரியையும் பற்றி நாம் புராணங்களில் கேட்கிறோம். இவ்விரண்டு கதைகளினின்றும் பதிவிரதா தன்மையின் ஒப்பற்ற பெருமையையும், அதை இழந்தவர்களின் கதியையும் நாம் தெற்றென வறியலாம்.

மேற்சொன்ன குணங்கள் யாவும் பொதிந்த பல கற்புக்காரிகைகள், பெண்மணிகள், நற்குல தீபங்கள், மாதுசிரோமணிகள், நம் நாட்டில் எண்ணிடக்கூடாதவர்கள் இருந்திருக்கின்றனர். இவ்வாறெனில் யாத மும்மாரிபெய்யவும், குடிவளந் தழைக்கவும், கோல்வளமோங்கவும் யாது தடை.

நேயர்களே! மேற்சொல்லப்பட்ட விஷயங்களினின்றும் நமது புராதன இந்தியாவின் இணையு-மெடுப்புமற்ற மாட்சி ஒருவாறுபுலப்படும்.

(பொய்யாமொழி)

சீ. சீனிவாச ராகவன்,
48, பக்தபுரி அக்கிரகாரம், கும்பகோணம்.

குறிப்பு:—நம் தாய்நாட்டின் புராதன நிலைமையை யுணர்ந்து, இப்போதுள்ள நிலைமைக்காக வெட்கி மனம் நொந்து, வீண் நாகரீக மயக்கில் சிக்கியழியாது நம் தாய்ப்பாஷையும், நம் நாட்டுக் கைத்தொழிலும் அபிவிருத்தியடையும் வழியில் உழைத்து, நம் பூர்வீகப் பெருமையை யடைய முயலவேண்டும். அதுவே தாய்நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமையாகும். அதை விட்டு "நம் நாட்டில் நெய்த துணி முரடாயிருக்கிறது. நான் தலைமுறை தலைமுறையாகச் சீமை மல் கட்டியேவாழ்ந்தேன். அது வருமுன் அம்மணமாகவிருந்தேன்" என்று கூறுவதுபோல் நடந்துகொண்டு, வாயால்மட்டும் எங்கள் பூர்வீகப் பெருமை யிப்படி யிருந்ததென்று கூறிக் கொள்வது வெட்கக்கேடேயாகும். அப்போது நாம் நம்முன்னோர் பெருமையையும், தாய்நாட்டின் பூர்வீக உன்னத நிலைமையையும் மனதார உணர்ந்தவர்களாகோம். இனியேனும் நம்மவர்களுக்கு நல்லுணர்வுண்டாக எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்புரியுமாறு பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

பிழை திருத்தம்.

321-ம் பக்கம் 3-வது பாட்டின் இரண்டாவது வரியை "சொற்பனங் கண்டாயுண்மை சொன்னேனுன்—கற்பனையொன்" என்று திருத்திக் கொள்ளவும்.

இல்லறம்—கன்மம்.

(312-ம் பக்கத் தொடர்ச்சி.)

குறிப்பு :—ஐயா! யாமிதுகாறும் இல்லற தருமத்தைப்பற்றியே யெழுதிவந்தோம். அவ்வில்லறத்தோடு மாறுபட்டு நிற்கும் துறவறத்தை யெழுதவில்லை. இல்லறத்தார்க்குரிய பல கன்மங்களுள் சிராத்தமென்பது மிகச் சிறந்தது. அது ஜீவன் உடலைவிட்டுப் புறப்பட்டதுமுதல் தான் செல்லுமிடத்தைச் சென்றடையுமட்டும் செய்யவேண்டிய கன்மங்களுடன் கூடியது. அதற்கு ஜீவகதி யென்று பேர். அதைக் கூறுமிடத்து வியாதியால் மடிந்த சரீரத்தைத் தகனம் செய்வது சிலாக்கியமுடையது என்பதும் அது துவிஜர்கள் எல்லாராலும் அனுஷ்டிக்கப்படுவதென்றுங் கூறினோம். அதுவும் நூல்களின் கருத்தேயொழிய எமது சொந்தக் கருத்தல்ல. இது இல்லறத்தார்க்கே யுரியது. இருளு மொளியும்போல இல்லறத்தோடு மாறுபடுவதாகிய துறவறதருமம் வேறு. அதை இனிமேல் யாம் சிறிது எழுதுவோம். நிற்க,

ஞானயோக சமாதியால் மலங்களைத் தகித்து நின்மலமான துறவிகளின் சரீரத்தைச் சமாதியி லடக்கம்செய்வதே யுசிதம். ஏனெனில் உலகங் கடந்த அவர்களுக்கு மரணமும் கிடையாது. அவர்கள் சரீரமும் தீ நீர் காற்று மண் முதலியவற்றுல் ஊறுபடுவதில்லை. அவர்கள் இறந்தவர்களைப்போலக் காணப்பட்டாலும் பிரமரந்திர ஸ்தானத்தில் சென்று பிரமத்தோடு வசிப்பார்கள். அவர்கள் மீண்டும் உயிர்த்து வந்து உலகத்துக் குபசரிப்பதும் கூடும். ஆதலால் மடாதிபதிகள் யோகிகள் இவர்களைச் சமாதியி லடக்கம் செய்வதே தகுதி. நிற்க,

கிறிஸ்துவ மஹமதியர் கொள்கைகளை யாம் அறியோம். அம்மத ஸ்தாபகர்கள் ஏதோ ஒரு ஆதாரத்தின்மேல் மதத்தை ஸ்தாபித்து நிலை நிறுத்தி யிருக்கின்றார்கள். ஆதலால் அம்மதஸ்தர்கள் தமது பூர்வாசாரியர்கள் கொள்கைகளைப்பற்றி யொழுகுவதே சரி. ஒவ்வொருவரும் தத்தம் மதநெறி கடவாமல் ஒழுகுவதே சன்மார்க்க நெறி யென்பதுதான் அத்வைத சித்தாந்தமென்பது எமது கொள்கை. அதுபற்றி யெமக்கு யாதும் விரோத புத்தியில்லை யென்பது கொள்க.

துறவறம்.

யாம் இதுகாறும் இல்லறத்திற்குரிய சில நியம விதிகளைப்பற்றி யெழுதிவந்தோம். அவ்வில்லறதருமம் ஒருவாறு முற்றுப்பெற்றபடியால் அதனை விடுத்து, இல்லறத்திற்கு முற்றும் மாறுனதும், உலகம் கடந்த பரம்

பொருளின் கருணையிலடங்கி நிற்பதும், ஜனனமரண பயங்களை யொழிப்பதும், எந்தப் பிராணிகளோடும் கலவாமல் தனித்து நின்று செய்யப்படுவதும், ஜீவன் முத்தத்தன்மையை எளிதில் அளிப்பதும், ஒப்புயர்வற்றதும், அநந்தகோடி ஜன்மாந்தரங்களிற் செய்த புண்ணிய கன்மங்களின் பலனாக அடையப்படுவதும், சத்துச் சித்தாநந்தப் பரம்பொருளொடு தானதுவென்னும் வேற்றுமையறக் கலந்துநிற்பதுமாகிய துறவறத்தைப்பற்றிச் சிறிது வரையக் கருதுகின்றோம்.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்று அன்னையாரால், அல்லது என்னும் எதிர்மறைச் சொல்லால் தழுவிக்கொள்ளப்பட்டது இதுவே. தேவரும் (நாயனார்) "புறத்தாறு" என்ற சொல்லால் தழுவிக்கொண்டார். பிறரொடு கலவாமல் தனித்து நின்று செய்யப்படுவதனாலும், சிறிது தவறு நேரினும், பிறரால் பழிக்கப்படுவதாதலானும் அதனை நல்லறமன்று என்று அன்னையார் கூறினாராயினும் அது இழிவென்பது அவரது கருத்தல்ல. "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால், எத்தாலுங் கூடியிருக்கலாம்-சற்றேனும், ஏறுமாறாக விருப்பாளேயாமாயின், கூறாமற் சன்னியாசம் கொள்" என்றதனால் இல்லறவாழ்க்கைக்குரிய பதிவிரதையான மனைவி யில்லாவிடின், துறவறமே மேலானதென்று கூறினாராதலாலென்க.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதூஉம்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று"

என்று தேவரும் கூறினர். இவற்றால் பதிவிரதையான மனைவி யில்லாவிடின் இல்லறதருமம் கெடும் என்பதும், பிறரால் பழிக்கப்படுந் தன்மையுடையதாயின் அத்துறவறதருமமும் பயன்படாதென்பதும் புலப்படுகின்றன. இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் இடையில் வானப்பிரஸ்தம் என்றொரு தருமமுளது.

தனது ஆயுளின் இரண்டாம் பாகத்தை யில்லறத்தில் கழித்து மூன்றாம் பாகத்தில் வனத்தை யடையவேண்டும். இரண்டாம் பாகமென்றது இருபத்தைந்து வயதுக்குமேல் ஐம்பது வயது வரையுமாம். நமது முன்னோர்கள் தத்தம் குலாசார ஒழுக்கம் தவறாது நடந்து வந்ததனால் அநேகமாய் எல்லாரும் அபமிருத்தியு முதலிய இடையூறுகளின்றி நூறு வருடம் ஜீவித்து வந்தார்கள். அந்த நியாயம்பற்றிப் புருஷாயுசை நாலு பாகமாக்கி, முதற்பாகத்தை பிரமசரியத்திலும், இரண்டாம்பாகத்தைக் கிரஹஸ்த தருமத்திலும், மூன்றாம் பாகத்தை வானப்பிரஸ்த தருமத்திலும், நாலாம் பாகத்தைச் சந்நியாச தருமத்திலும் செலுத்தவேண்டுமென்றும் நூல்கள் கூறுகின்றன. கூறினவேனும் பரிபாக முதிர்ச்சிபெற்றவர்கள் பிரமசரியாச்சிரமத்தை முடித்தவனந்தரமே சந்நியாசத்தைக் கைக்கொள்ளலாமென்றும் நூல்களே கூறின. ஆயினும் ஏனையர் பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற முறை வழுவாது செய்வதே யுசிதமாம்.

இனி "வானப் பிரஸ்தம்" என்பதும் ஓர் வகையில் துறவேயாம்.

எவ்வாறெனில் வானப்பிரஸ்தர்கள் (வனத்தில் வசிப்போர்) இந்திரிய நிக்கிரகம் செய்யவேண்டும். இந்திரியங்களை யடக்கித் துறவிகளைப்போலவே யுலகப் பற்றற் றிருக்கவேண்டும். வண்டி குதிரை முதலிய வாகனங்களிலேறக்கூடாது. நெல் முதலியவற்றாலாக்கப்படும் உணவுகளைப் புசித்தல் கூடாது. தன் புத்திரர்களுக்குப் புத்திரர்கள் பிறந்தபின் பேரப்பிள்ளைகளின் முகத்தைக்கண்டு மகிழ்ந்து பின் வனம்புகவேண்டுமென்னும் சிறந்த விதியொன்றுண்டு. தன் பத்தினியைப் புத்திரர்களிடத்தில் ஒப்புவித்து விட்டாவது, அல்லது தன்கூடவே அழைத்துக்கொண்டாவது வனம் புகலாம். மனைவியோடு வனம் செல்பவன் கிரகஸ்த தர்மமாகிய ஔபாஸனாதி அக்கினி காரியங்களைச் செய்யவேண்டும். மனைவியைவிட்டுச் செல்பவன் பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். ஜடை வளர்க்கவேண்டும். முக க்ஷவரம் செய்துகொள்ளக்கூடாது. கைகால்நகங்களைக் களையாமல் விட்டுவிடவேண்டும். காட்டில் தானாக விளையும் காய்கனி கிழங்குகளைப் புசிக்கவேண்டும். அவற்றைக்கொண்டே யதிதிகளை யாராதிக்கவேண்டும். அக்கினிஹோத்திரம் பிதிர்காரியங்கள் எல்லாம் கனி கிழங்குகளைக்கொண்டே செய்யவேண்டும். தேவாராதனை செய்யவேண்டும். காயத்திரி மஹா மந்திரத்தை ஜபிக்கவேண்டும். கண்டவைகளைப் புசிப்பது கூடாது. கண்டவைகளை விக்கிரயம் செய்வதுங் கூடாது. திரிகாலமும் ஸ்நானம் செய்யவேண்டும். மரவுரியே தரித்தல் வேண்டும். காய் கிழங்குகளைக்கொண்டு பஞ்சமஹாயக்ஞங்களையும் தவறாமற் செய்யவேண்டும். ஒருவரிடத்திலும் தானம் வாங்கக்கூடாது. எல்லாரிடத்தும் அன்பும் தயவுமுடையவனா யிருக்கவேண்டும். மான் முதலியவற்றின் தோல்களையும் ஆடைகளாக வுடுக்கலாம். தாடி, மீசை, சரீரத்திலுள்ள ரோமம், நகம் இவைகளை யெடுக்கக்கூடாது. இந்திரியங்களை யடக்குவதும், வைதிக கிருத்தியங்களைத் தவறாமற் செய்வதும், இதர ஜீவர்களிடத்தில் அன்புடைமையும், எல்லாரிடத்தும் இனிமையாகப் பேசுவதும், பனி, மழை, காற்று, வெயில் இவற்றைப் பொறுத்துக்கொண்டிருப்பதும், வேதமோதுவதும், பரமநிஷ்டை கூடியிருப்பதும் வானப்பிரஸ்த தருமமாம்.

இந்த வானப்பிரஸ்த தருமமும் இருவகைப்படும். வனத்திலிருந்துகொண்டு கிரகஸ்த தருமத்தை அனுஷ்டிப்பதும், சன்னியாச தருமத்தை யனுசரிப்பதும் என்பனவாம். இதுவரையிலும் கூறியது கிரஹஸ்த தருமம் பற்றிய வானப்பிரஸ்தம். கிரஹஸ்த தருமத்தை யனுசரித்தாலும் புத்திரர்களைப் பெறுவதும், சுகத்தைக் கருதுவதும் கூடாது. சாந்திராயணம் கிருச்சிரமம் முதலிய விரதங்களைச் சக்திக்குத் தக்கபடி அனுஷ்டிக்கவேண்டும். நரகத்துக்கு மூன்று மார்க்கங்களுள்ளன. அவை காமம், குரோதம், லோபம் என்பனவாம். பிட்சுகனுக்குச் (சந்நியாசிக்கு) சமானனாயிருக்கிற. வானப்பிரஸ்தன் இம்மூன்று குணங்களையும் முற்று மொழித்

துவிடவேண்டும். கட்டிடமின்றி யிருக்கிற பூமியில் படுப்பதும், நடமாடுவதும் அவருக்கியல்பாம். சிரௌதாக்கினியிலுண்டான பஸ்மத்தை யுட்கொண்டு, நீவாராதி புல்லரிசியையு மொழித்துத் தானே பழுத்துதிர்ந்த காய்கனிகளைப் புசித்து வரவேண்டும். மனைவி மக்கள் இனிப்பு புளிப்பான ருசியுள்ள கனிகள் இவற்றில் பற்றுதல் வைப்பது கூடாது. பிரமசரியத்தை யனுசரித்து மரத்தினடியில் படுக்கவேண்டும். அவ்விடத்திலேயே வசித்தல் வேண்டும். தவம்புரிவோர், கிரகஸ்தாச்சிரமத்தி லிருப்பவர், கிராமத்திலிருப்பவர் இவர்களிடத்தில் தனது வயிற்றுக்குப் போதுமான உணவை யாசித்துவரவேண்டும். எட்டுக் கவளத்துக்குமேல் பிக்ஷையெடுக்கக்கூடாது. தனது கைகளிலாவது, அல்லது உடைந்தமண்பாண்டத்தின் ஓட்டிலாவது பிக்ஷையெடுக்கவேண்டும். இத்தருமங்களைக் கைக்கொண்டு உபநிஷதங்களைக் கற்றுக்கொண்டு அதன்படி ஒழுகவேண்டும். வைத்தியத்தினால் வியாதி நீங்காமலிருக்குமாயின் அவன் கீழ்திசையை நோக்கி வேகமாய்ச் செல்லவேண்டும். அப்பொழுதும் ருசியுள்ள உணவுகளில் சித்தம் வைக்கக்கூடாது. தண்ணீர் காற்று இவற்றைமட்டும் புசித்துவரவேண்டும். பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம்புரிவதும் இவர்களுக்கு விதியாம். இவ்வாறு கூறிய தருமங்களில் தன் சக்திக்கு எற்றதை யனுசரித்து அந்நெறியினின்று தவறுதொழுகும் வானப்பிரஸ்தனுக்கு ஜனனமரணபயம் கிடையாது. அவன் பிரமலோகமென்ற மோட்ச வுலகத்தையடைவான். இந்த வானப்பிரஸ்த தருமம் மிகவும் மங்களகரமானது. அசுபங்களையெல்லா மொழிப்பது. வனத்தில் வசித்து அருமையான தவம்புரிந்து சமாதியிலிருந்து வரும் வானப்பிரஸ்தன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு மோட்சத்தை யடைவான். புராணாதிகளிலே கூறப்படும் ரிஷிகள் எல்லாரும் மேற்கூறிய தருமங்களை அனுஷ்டித்துவந்த கிருகஸ்தரும் வானப்பிரஸ்தருமேயாம். இவர்களே வனத்தில் வசித்து அநேக அரிய அற்புத விஷயங்களைத் தமது தபோமகிமையினால் அறிந்துகொண்டு உலகத்தாருக்கு அனுக்கிரகித்து வந்தார்கள். அடிக்கடி அரசர்களைக் கண்டித்துப் பிரஜாபாலனத்தை முறைதவறுமல் நடத்தும்படி செய்தார்கள். அவர்கள் மகிமை அளவுகடந்ததென்பது நமது பரதகண்டத்தில் பிறந்தவர்களிலறியாதா ரில்லை.

வானப்பிரஸ்தம் முற்றும்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

பகவத்கீதை வசனம்.

(308-ம் பக்கத் தொடர்ச்சி.)

அர்ச்சுனன் :—எ பகவான்! சந்நியாசி, அசந்நியாசி, ஞானி, அஞ்ஞானி யாவருமே நவத்துவாரங்கள் பொருந்திய இத்தேகத்தின்கண் வசிக்கின்றனர். அப்படியிருக்க ஒருவர் ஆனந்த வடிவமாகவும் மற்றையர் துக்க ரூபமாகவும் இருப்பானேன்?

பகவான் :—ஞானி பஞ்சபூதங்களாலாகிய இத்தேகத்தில் இருப்பினும் தன்னை யித்தேகத்தினும் வேறாகிய பிரத்யகான்ம சொரூபமாய்க் காண்கிறானேயன்றித் தேகரூபமாகக் காண்பதில்லை. அன்னியர் வீட்டில் வசிக்கும் ஒருவன் அவ்வீட்டின் க்ஷேமம் ஹானி இவற்றால் சந்தோஷமும் துக்கமும் அடைவதில்லை. அதுபோல் ஞானியாகிய சந்நியாசியும் சரீரத்தில் அபிமானமற்றவனாதலின் அதன் துதி நிந்தைகளால் சுக துக்கங்களை யடைவதில்லை. அகந்தை மமதைகளும் அவனிடமிரா. அதனால் அவன் சுகரூபியாயிருக்கிறான்.

அஞ்ஞானியோ தன்னை ஆன்மாவாக அறியாமல் தேகரூபமாகவே யறிகிறான். அதனால் நான் கர்த்தா போக்தாவென வெண்ணிச் சுகதுக்கங்களால் மொத்துண்டு உழல்கிறான். உண்மையில் ஆன்மா ஒன்றைச் செய்வதுமில்லை செய்விப்பதுமில்லை.

அர்ச்சுனன் "ஏ பகவான்! தேவதத்தன் என்பவனிடம் உண்மையாயுள்ள கமனவடிவக்கிரியை அவன் நிலைத்திருக்குங்காலத்தில் இல்லாதது போல் ஆன்மாவினிடத்துள்ள செய்யும் தன்மை செய்விக்குந் தன்மையாகிய கிரியைகள் சந்நியாச நிலையில் இல்லை யென்பது தங்கள் கருத்தோ? அல்லது ஆகாயத்தில் நிறம் வடிவம் உண்மையில் இல்லாது ஆரோபத்தால் தோன்றுவதுபோல் ஆன்மாவினிடம் செய்யுந்தன்மையும் செய்விக்குந்தன்மையும் உண்மையில் இன்று என்பது தங்கள் கருத்தோ?" என்று வினவிய சங்கைக்குப் பகவான் அருளிச்செய்கின்றார் :—

ஏ பார்த்த! இவ்வான்மா கர்த்திருத்வத்தையும், கர்மத்தையும், கர்மபலன்களோடு சம்பந்தத்தையும் உண்டாக்குவதில்லை. அது கர்மத்தைச் செய்வதுமில்லை செய்விப்பதுமில்லை. அஞ்ஞான வடிவமாகிய மாயையே இக் காரியமனைத்தும் செய்விப்பதிற் பிரவிருத்திக்கிறது.

அந்த மாயையால் அஞ்ஞானத்தின் வயப்பட்ட சீவர்கள் தாதான்மியங்களை யடைந்து நான் இக்கர்மத்தைச் செய்கிறேன், இப்போகத்தைப் புசிக்கிறேன், என்று மோகத்தால் கருதி ஜனனமரண துக்கத்தை யனுபவிக்கிறார்கள்.

"அப்படியாயின் இஜ் ஜனனமரணதுக்கம் எவ்வாறு ஒழியும்?" என்ற அர்ச்சுனனது சங்கைக்குப் பகவான் விடை யருள்கிறார் :—

ஏ பார்த்த! ஞானத்தால் ஆவரணரூபமான அஞ்ஞானம், அனாதியாயினும், முழுமையும் அழியும். எப்புருஷனுடைய அஞ்ஞானம் ஒழிந்ததோ அவனுக்கு ஆன்மஞானம், அந்தகாரத்தை நீக்கிய சூரியன் சுடர்விட்டுப் பிரகாசிப்பதுபோல், பிரகாசிக்கும். இவ்வாறடைந்த ஞானத்தால் பரமான்மா வேறு நாம் வேறு என்ற பேதபுத்தியின்றி, அதுவே நாம், நாமே யது என்ற ஐக்கிய நிலையையடைந்தோர் மீண்டும் பிறவாத முத்தியையே யடைவர். ஆன்மா வேறு, பரமான்மா வேறு என்ற பேதபுத்தி நீங்காதோர் பரமான்வை யறிந்தவராகார்.

பொன்னை யன்றிப் பூணில்லை பூணை யன்றிப் பொன்னில்லை
என்னை யன்றிச் சிவனில்லைச் சிவனை யன்றி யானில்லை
யின்ன வண்ண மறிந்தோனே யீசன் றனையு மறிந்தோனு
மின்ன வண்ண மறியாதா னீசன் றனையு மறியானே. (வள்ளலார்)

ஆன்மா வேறு, பரமான்மா வேறு என்ற பேதம் தோன்றுமளவும் முத்தியில்லை. ஏனெனில் உண்மையில் பரமான்மாவையன்றி வேறாக ஆன்மா என்ற ஒன்றில்லை. பரப்பிரம்மம் ஒன்றே அஞ்ஞான தசையில் ஜகம், ஜீவம், பரம் என்ற மூன்று பேதமாய் விளங்குகிறது. இதனுனே ஜகஜீவபரம் மூன்றும் அநித்தியம் என்று கூறப்பட்டது. ஆதலின் சிவமே நாம் நாமே சிவம், நம்மைவிட்டுச் சிவம் வேறாக இல்லை என்ற அபேத ஞானமே முத்தியளிக்கும்.

உடலுறு முயிரு மாகி யுயிர்தொறு முணர்வு மாகிச்
சடமச டங்க டோறுஞ் சாக்கியு மாகி நின்ற
வடல்புனை சிவனுர் நம்மை யன்றிவே றில்லை யென்றே
யுடைகுட விசும்பு போலொன் றுதலே யோக மாமே.(வள்ளலார்)

ஞானமடைந்த ஆன்மா தன்வரையில் மாயையை நீக்கிக்கொள்வதால் மாயை அநுதியாயினும் அநித்தியமே யென்றும், ஆனல் மற்ற உலக மாயை யிருந்துகொண்டே யிருக்கிறபடியால் அதைக்குறித்து நித்திய மென்றும் கூறப்பட்டது. ஆதலின் ஜகஜீவபரம் மூன்றும் நித்தியம் என்ற பட்சமும் அநித்தியம் என்ற பட்சமும் இரண்டும் அங்கீகரிக்கத் தக்கவையே. ஞானநிலையில் அநித்தியமும், அஞ்ஞான நிலையில் நித்தியமுமாம்.

வள்ளலார் "சித்தாந்த தரிசனம்" என்ற நூலில் பாசவியல் கூறுங்கால்,

"மாயை சடமயக்க மதந்தா மதம்பொய்ம்மை
காயம் விளக்குங் கனு"—என்றருளினர்.

அருணகிரிநாதர் "இல்லேயெனு மாயையி லிட்டெனை நீ—பொல்லேனறியாமை பொறுத்திலையே" என்றருளினுர்.

அப்படியாயின் இது விஷயமாகச் சிலர் வாதாடுகிருர்களே யெனின் அது தவறே. அறிவாளிகளுக்கு அப்பேதமிராது.

வேதமோ டாகம மெய்யா மிறைவனு
லோதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. (திருமந்திரம்)

ஆன்மாவும் ஒன்றைச் செய்வதுமில்லை செய்விப்பதுமில்லை. பரமான்மாவும் அகண்டமாக எங்கும் நிறைந்திருப்பினும் ஒன்றையும் செய்பவரு மல்ல, செய்விப்பவருமல்ல. ஆன்மாக்களின் பாபபுண்ணிய கருமங்களில் ஒன்றும் அவரைப் பற்றுவதில்லை. மற்றபடி யார் செய்தும் செய்வித்தும்

பிரவிர்த்திப்பவர் எனின், தெய்வீகமாயையாகிய பிரகிருதியே பிரவிருத்திக்கின்றது. சூரியன் எவ்வித பாரபக்ஷமுமின்றிப் பிரபஞ்சத்தின் நன்மைக்கே பிரகாசித்தபோதிலும், உலகிலுள்ள வஸ்துக்கள் அவ்வவற்றின் சுபாவத்திற்குத் தக்கபடி ஒன்றுக்கொன்று மாறுன பலவித நிலைகளை யடைகின்றன. எவ்வாறெனின் ஜலத்திலுள்ள தாமரை மலர்ந்து பிரகாசிக்கிறது. தரையிலுள்ள தாமரை வாடியுலர்கிறது. பனிக்கட்டி நீராக மாறுகிறது. ஜலம் நீராவியாய்ப் போகிறது.

இவ்வாறே எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரமான்மாவின் சந்நிதானத்தில் ஜீவன்கள் அவ்வவற்றின் கர்மத்திற்குத் தக்க பலன்களை யனுபவிக்கவும் காரியங்களைச் செய்யவும் மாயையாகிய பிரகிருதியே பிரவிருத்திக்கின்றது. உண்மையில் ஆன்மாவினிடம் ஒரு கருமமுமில்லை.

அஞ்ஞானம், ஆவரணம், அவித்தை, பிரகிருதி, மாயை, சத்தி என்பன ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களே. இந்த அஞ்ஞானம் சீவனையே பற்றி நின்று, சீவன் தன் நிஜவுருவைக் காணுவண்ணம் மறைக்கிறது. சூரியன் உதயமானதே இருள் நீங்குவதுபோல் ஞானம் உதயமானதே அஞ்ஞானம் நீங்குகிறது. ஒரு குகையில் இருள் சிருட்டிகாலத்திலிருந்தே இருந்தாலும், தீபத்தைக்கண்டதே மறைவதுபோல் அஞ்ஞானம் அனுதியாயினும் ஞானேதயமானதே நீங்கும். ஆன்மா ஞான சொரூபமே. அது தன்னை யறியாத் தன்மையே அஞ்ஞானமாம். கதையிலில்லாத பெரும்பொய்போன்றதே மாயையென்றும், "யாதொன்றில்லாதது அது மாயையாகும்" என்றும் வாசிட்டம், கைவல்யம் முதலிய பிரபல நூல்கள் கூறியிருக்கின்றன. ஏனெனில் அறிவைக்கொண்டு பார்க்கும்போது மாயை புலப்படாது. அதனுனே மாயையும் மாயாகாரியங்களுமாகிய யாவும் பொய் யென்றும், ஞானநிலையில் பொய்யாய்ப்போய் அஞ்ஞான நிலையில் தோன்றுவதால் மாயையாகிய ஆவரணம் கானல்நீர், கயிற்றரவு, கிளிஞ்சில் வெள்ளி இவற்றிற்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டது. அதற்கு ஒரு வித சொரூபமுமில்லை யாதலின் அவாச்சிய வடிவம் எனப்பட்டது.

"போத மென்பதே விளக்கொவ்வு மவித்தைபொய் யிருளாம்
நீதி லாவிளக் கெடுத்திரு ட்டவுஞ் சிக்கா
தாத லாலறி வாய்நின்ற விடத்தறி யாமை
யேது மில்லையென் றெம்பிரான் சுருதியே யியம்பும்"

என்று தாயுமான சுவாமிகள் கூறியருளினர்.

அந்தகாரம் எவ்வாறு வீட்டைப்பற்றி யிருந்து வீட்டையே மறைக்கிறதோ, அவ்வாறே மாயை யல்லது அஞ்ஞானம் சீவனைப் பற்றிக்கொண்டிருந்து அதன் அறிவாகிய கண்ணை மறைக்கிறது.

(இதுகாறும் பகவான் ஆன்ம ஞானத்தால் பெறப்படும் விதேககைவல்யத்தைப்பற்றிக் கூறி யருளினர். இனி ஆன்ம ஞானத்தால் இத்தேகத்தி

விருக்கும்போதே யடையத்தக்க ஜீவன்முக்தத் தன்மையைப்பற்றிக் கூறி யருள்கின்றார்.)

ஏ அர்ச்சுனா! சத்துவ ரஜோ தமோகுண பேதங்களான எல்லாச் சீவன்களிடத்தும் அபேதமாய் என்னை எவன் காண்கிறானோ அவன் தேகத் தோடிருந்தாலும் தேகசம்பந்தமான ஜனன மரணாதிகளைச் சயித்தவ னாவான்.

சூரியன் சுத்தமான கங்காஜலத்திலும், அசுத்தமான சாக்கடை நீரி லும், நறுமணம் பொருந்திய மலர்மேலும், துர்நாற்றமுடைய மலத்தின் மேலும் பிரகாசித்தாலும் அந்த வஸ்துக்களின் சுத்தா சுத்தங்களால் பற் றப்படாமல், தான் பரிசுத்தமாகவே பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. ஆகாயம் இந்த அண்டரண்ட சராசரமனைத்திற்கும் இருப்பிடமாகவிருந்து கொண்டு இவற்றின் உட்புறம் எங்கணும் வியாபித்து நின்றாலும் எதிலும் தாக்கற்று இருக்கிறது. அதைப்போலவே பரமான்மா யாவற்றினும் உள் ளும்புறம்புமாய்ச் சர்வவியாபியாய் நிறைந்து நின்றாலும், எதிலும் தாக்கற் றுப் பரிசுத்தமான சச்சிதாநந்த மயமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருக்கி றது. அத்தகைய பிரம்மத்தைத் தன் ஆன்ம சொரூபத்தோடு அபேதமாய் எவன் காண்கிறானோ அச்சீவன் முத்தன் பிறப்பிறப்பை யொழித்தவனே யாவான். (தொடரும்)

சீடன்.

மகா அலக்ஸாண்டரும் பிராம்மண சந்நியாசிகளும்.

(314-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர்கள் உதயம் முதல் அஸ்தமனம் வரையில் சூரியனை இடை விடாது இமைகொட்டாமல் பார்த்தவண்ணமாய் நிற்கின்றனர்; பகலெல்லா வும் கொதிக்கின்ற சுடு மணலில், முன்னர் ஒரு காலிலும் பிறகு மற்றொரு காலிலும் நிற்கின்றனர்; குளிர்காலத்தின் நடுக்கத்தையும், காக்கஸஸ் (Caucasus) மலையின் பனியையும் சற்றும் துன்பமுறாது சகிக்கின்றனர்.

அலெக்ஸாண்டரையும் அவர் சேனையையும் அச்சந்நியாசிகள் கண்ட தும் அவர்கள் தங்கள் கால்களால் பூமியை உதைத்தனரன்றிப் பிறிதொன் றும் செய்தாரில்லை. இயற்கையாய் அலெக்ஸாண்டருக்குக் கோபமூண் டது. கற்றுச் சொல்லிகள் அவர்களிடம் சென்று அவ்வாறு செய்ததற் குக் காரணம் வினவ, அவர்கள், "ஓ, அலெக்ஸாண்டர் அரசனே! ஒவ் வொரு மானிடனும் நாங்கள் நின்றிருக்கும் இந்த அளவு மண்ணுக்கே உரிமை வகிக்கிறான். ஆனால் நீயோ எங்களைப்போன்ற மனிதனேயாயி னும் அதிக அகங்காரமும், அன்னியருக்குத் தொந்தரவு கொடுக்கும் குண மும் உடையவனாய், உனக்கும் அன்னியருக்கும் கஷ்டங்களை விளைவித்துக் கொண்டு, உலகின் பெரும்பாகத்தைக் கடந்துவந் திருக்கிறாய். இருந்த போதிலும் நீயும் சீக்கிரமிறந்து உன்னைப் புதைப்பதற்குப் போதுமான பூமிக்கு மாத்திரமே உரியவனாவாய்" என்றனர். (அர்ரியன்-Arrian.)

கீர்த்தியடைவதிலுள்ள பேராவல் மிக்க அதிகமாய் அலக்ஸாண்டரைப்பற்றிக் கொண்டிருந்தாலும் மேலான விஷயங்களை உணரும் ஞானம் அவரிடம் அடியோடில்லாமலில்லை. ஆகையால் அலக்ஸாண்டர் அவர்கள் கூறியதைக் கேட்டதும், கோபத்தால் விளையும் அனர்த்தச் செயல்களில் கையிடாமல், அவர்கள் கூறியதை மெச்சினார்; இவ்விதமாய் அவர் அன்னாருடைய கொள்கைகளை அறிய ஆவல்கொண்டார். மற்றையோர் தங்களை அழைப்பினும், இச்சந்நியாசிகள் அதற்கு இணங்காமல், அவர்களைத் தங்களிடம் வந்து, பயின்றுகொண்டோ அல்லது சம்பாஷித்துக்கொண்டோ இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள் என்பதை அலக்ஸாண்டர் அறிந்துகொண்டார். விஷயம் இப்படி இருப்பதால், அலக்ஸாண்டர், அவர்களிடம் தான் போவது தன் அந்தஸ்துக்குத் தகுதி என்று எண்ணவில்லை. அதோடு அவர்களுடைய நாட்டு வழக்கங்கட்கோ இச்சைக்கோ விரோதமாய் நடக்கும்படி அவர்களை வற்புறுத்தவும் எண்ணவில்லை. ஆனால் அவ்விருடிகளில் ஒருவரைத் தன்னிடம் வரச்செய்து, கூடுமானால், அவரைத் தன்னோடு வசிக்கச் செய்யவேண்டும் என்ற அவாவுடையரானார். ஆகையால், தன் கப்பலுக்கு மாலுமியும் டயோஜெனிஸின் (Diogenes) தத்துவ சாத்திரத்தின் விரக்தி மார்க்கங்களை ஆர்வத்துடன் பின்பற்றினவனும் ஆன ஒன்ஸிகிரிடாஸ் (Onesikritos) என்பவனை அவர்களிடம் அனுப்பினார். அவன் அத்தபோதனர்களில் ஒருவரான கலனுஸ் (Kalonos) (கல்யாணர் என்பதன் சிதைவு மொழிபோலும்) என்னும் சந்நியாசியைச் சந்தித்து முதலில் பேசினான். அவர் அப்போது கற்களின் மீது படுத்துக்கொண்டிருந்தார். தூதன் அவரை அணுகி விளித்து, “நான் தங்கள் ஞானமார்க்கத்தைக் கேட்டுச் சென்று அதன் சுபாவத்தை அரசர்க்கு அறிவிப்பதற்காக அவரால் அனுப்பப்பட்டு வந்தேன்” என்று அறிவித்து, ஆகையால் யாதொரு ஆக்ஷேபனையும் இல்லாதபக்ஷத்தில் தான் அவர் கூறுவதைக் கேட்கத் தயாராயிருப்பதாகக் கூறினான். கலனுஸ் என்னும் இருடி, தூதனணிந்திருந்த மேலங்கியையும் அகன்ற, தலையணியையும், நீண்ட பாதரட்சையையும் பார்த்து நகைத்துத் தன் உபதேசங்களைக் கேட்கவிரும்பின் அவ்வுடுப்புக்களைக் களைந்துவிட்டுத் தன்னுடன் நிர்வாணமாய் அதே கற்களில் படுத்துக்கொள்ளவேண்டும் என்றார். தூதன் என்ன செய்வது என்று தடுமாற்றமுற்றிருக்கையில், அங்கிருந்த எல்லாச் சந்நியாசிகளிலும், வயதிலும் ஞானத்திலும் மிக்கவரும், முண்டிதசிரமுடையவருமான மாண்டனிஸ் (இவரை டாண்டமிஸ் என்று சிலர் தவறாகக் கூறுவர்) என்னும் இருடி, கற்களில் படுத்துக்கொண்டிருந்தவரை அவரது அகந்தையான நடத்தைக்கும், பிறரிடமிருப்பதற்காக அவர் குற்றங்கூறும் அதே துர்நடக்கை அவரிடமே யிருப்பதற்காகவும் அவரைக் கண்டித்தார். அவர் பிறகு தூதனைத் தம்மிடம் அழைத்து, “அலக்ஸாண்டர் அரசன் இவ்வளவு பெரிய இராஜ்ஜியத்தை ஆளுகிறான் என்றாலும், ஞானத்தையும் விரும்புவதால் நான் அவனைப் புகழ்கிறேன். ஏனெனில்

யுத்த நிபுணர்களில் ஞானத்தை விரும்புபவன் இவன் ஒருவனையே நான் கண்டேன்" என்றார். (ஸ்ட்ராபோ-Strabo)

தூதன், "பிராம்மணரின் குருவே, வந்தனம்! மகா பராக்கிரம மமைந்த சீயஸ் (Zeus) கடவுளின் புத்திரரும், எல்லா மானிடர்களுக்கும் ஏக சக்கிரவர்த்தியுமாகிய அலக்ஸாண்டர், உங்கள் சம்மதத்தின்மேல் உங்களைத் தம்மிடம் வரும்படிக் கேட்டுக்கொள்கிறார். அவர் தங்களுக்குப் பெரிய உயர்ந்த சன்மானங்கள் அளிப்பர். நீர் வர மறுத்தாலோ தங்களுடைய சிரசைக் கொய்துவிடுவார்" என்றான்.

மாண்டனிஸ், களிபொருந்திய புன்முறுவலிப்புடன் கூடியவராய் அவன் கழன்றனவெல்லாம் கேட்டாரெனினும், தான் படுத்துக்கொண்டிருந்த தழைகளினின்றும் சிறிதுகூடத் தலையைத் தூக்கிப்பார்க்காது, படுத்தபடியே வெறுப்போடு பின்வருமாறு பதிலளித்தார்:—

அலக்ஸாண்டரைப்போல நானும் சீயஸ் கடவுளின் புத்திரன்தான். எல்லாவற்றிற்கும் தனி இறையாய் விளங்கும் கடவுள், அகங்காரத்தாற் செய்யும் துர்ச்செயல்கட்குக் காரணரல்லர். அவர் வெளிச்சத்தையும், சமாதானத்தையும், ஜீவியத்தையும், தண்ணீரையும், மானிட சரீரத்தையும், ஆன்மாக்களையும்,சிருஷ்டித்துத் தீய எண்ணங்கட்கு இடம் கொடாதவராய் அவைகளின் முடிவு காலங்களில், அவைகளை மீட்டும் தன்னிடம் இழுத்துக்கொள்ளுகிறார். கொலைத்தொழிலை வெறுப்பவரும் போர்புரிதற்கிடங் கொடாதவருமான அவ்வொருவரே நான் போற்றுதற்குரிய கடவுள். அலக்ஸாண்டரோ இறக்கவேண்டியவனேயாதலால் கடவுளன்று. அப்படியிருக்க டிப்ஸ்போஸ் (Tibsboas) நதியின் மறுபுறக் கரையளவும் கூடச் சென்றிராதவனும், பூலோக சிம்மாதனத்தி லமராதவனுமான இவன் எப்படி உலக முழுவதுக்கும் எஜமானவன்? மேலும் அலக்ஸாண்டர் இன்னும் உயிரோடு பிதுர்லோகத்திற் பிரவேசித்ததுமில்லை, பூமியின் மத்திய பிரதேசத்தில் சூரியன் செல்லும் மார்க்கத்தை யறிந்ததுமில்லை. இவனுடைய பெயரைக்கூட இன்னும் அனேக தேசத்தார் கேட்டறியார்களே.

அப்படி யிருந்தாலும் நான் கூறுவதைக் கேள். அலக்ஸாண்டர் இப்போது அளிக்க இருக்கும் பரிசுகளடங்கலும் எனக்கு முற்றும் பயனற்றவை என்று அறியக்கடவை. என் வாசஸ்தலத்திற்கு ஆதாரமான இத்தழைகளும், தினம் உணவு தரத்தக்க செழிப்பான இச் செடிகளும், குடிக்கவுதவும் இத்தண்ணீருந்தான் நான் மெச்சுபவையும், உண்மையில் எனக்குப் பயனளிப்பவையுமாக விருக்கின்றன. அதிக ஆவலோடு சேர்த்துவைக்கப்பட்ட மற்றைய உடைமைகளும், வஸ்துக்களும் அவைகளைச் சேகரிப்பவனுக்குக் கஷ்டத்தையே உண்டுபண்ணும். பாவம்! ஒவ்வொரு மனிதனும், எற்கனவே இத்தகைய துக்கமும் மனமுறிவுமான கஷ்டத்தையுடையவனாகவே யிருக்கிறான். ஆனால் நானோ இக்காட்டில் உள்ள இலைகளின்மீது படுக்கிறேன். பாதுகாக்கவேண்டிய பொருள்கள் நீங்கப்பெற்றவனாதலால், கவலையற்றுச் சுகநித்திரைகொள்ளுகிறேன். என்னிடம் திரவியம் இருப்பின் அது என் தூக்கத்தை ஓட்டிவிடும். தாய் தன் குழந்தைக்குப் பால் ஊட்டுவதுபோன்று இம்மாநிலம் எனக்கு வேண்டுவன எல்லாம் அளிக்கின்றது. சுயேச்சைப்படி நான் எங்கு வேண்டுமாயினும் போகிறேன். என் மன விருப்பத்திற்கு மாறாய் நடக்கும்படி என்னைக் கட்டாயப்படுத்தும் கவலைகள் என்னிடமில்லை.

மாண்டனிஸ் சற்று வாளாவிருந்து மீட்டும் கூறுகிறார் :—

அலக்ஸாண்டர் என் சிரசைக் கொய்வானாயினும் என் ஆன்மாவையும் சேர்த்து அழிக்க அவனால் முடியாது. என் தலைமாத்திரம் அப்போது பேசாமற் கிடக்கும். கிழிந்த உடையை வீசி யெறிவதுபோல் என் ஆன்மா இச் சரீரத்தைத் தன் ஜென்ம க்ஷேத்திரமாகிய இப்பூமியிலேயே தள்ளி விட்டுத் தன்னுடைய கர்த்தாவிடமேகும். பிறகு, நான் என்னை இச்சரீரத்தில் தங்கவைத்து இவ்வுலகில் விட்ட என் கடவுளண்டை சூட்சுமரூபமாய்ப் போய்ச் சேர்வேன். அவர் இவ்வாறு செய்வது தாம் இயற்றியருளிய விதிகட்கேற்ப நாம் இவ்வுலகிலிருக்கையில் ஒழுங்காக நடக்கிறோமா என்பதை யறியும்பொருட்டே. ஆதலால் நாம் இங்கிருந்து அவர் சமுகத்தில் செல்லும்போது, நம் ஜீவிய சரித்திரங்களைக் கேட்டு நீதி வழங்கும் ஒரு நியாயாதிபதியாய் அவர் விளங்குகிறார். ஏனெனில் துன்பத்திற்காளானவர்களின் அழுகுரல் துன்பப்படுத்தியவரைத் தண்டிக்குமன்றோ?

அவ்விருடி மேலும் கூறுகிறார் :—

பொன்னையும் செல்வங்களையும் விரும்புவோரையும், மரணத்திற்குப் பயப்படுவோரையுமே அலக்ஸாண்டர் இவ்விதம் பயங்காட்டட்டும். பிராம்மணருக்குப் பொன்னிலாசையாவது மரணத்திற்கு பயமாவது இல்லை. ஆதலால் இந்த மிரட்டுக்களாகிய ஆயுதங்கள் எங்களிடம் சக்தியற்று அடங்கும். நீ சென்று அலக்ஸாண்டருக்கு இதைத் தெரிவி:— உங்களுக்குச் சொந்தமாய் உள்ள எந்த வஸ்துவும் மாண்டனிஸுக்குத் தேவையில்லை. ஆதலால் அவன் உம்மிடம் வரமாட்டான். அலக்ஸாண்டருக்கு ஏதாவது மாண்டனிவிடமிருந்து வேண்டுமெனின், அலக்ஸாண்டர் அவனிடம் வரவேண்டும். (பிராக்மெண்ட்-Fragment 55.)

பிறகு மாண்டனிஸ் தூதனைப்பார்த்து, "கிரேக்கர்களிடம் இவ்விதக் கொள்கைகள் இருக்கின்றனவா?" என்றார். தூதன், "பிதாகொராஸ் (Pythagoras) இதுபோன்ற கொள்கைகளைக் கற்பித்துத் தன் சீடர்களைப் புலாலுண்ணுதலினின்றும் விலக்கினர். சாக்ரெடிஸ், டயாகினிஸ் (Socrates, Diogenes) இவர்களின் போதனைகளை நான் கேட்டிருக்கிறேன்; அவர்களும் இதுபோன்றவையே உபதேசித்தனர்" என்றான்.

மாண்டனிஸ் பின்னும் சொல்கிறார், "அவர்களின் போதனைகள் நல்லவை என்றே நான் எண்ணுகிறேன். ஆயின் ஓர் விஷயத்தில் தவறினர். இயற்கை சுபாவத்தைக் காட்டிலும் வழக்கத்தையே மேலாகக் கொண்டாடினர். அதனால்தான் அவர்கள் நிர்வாணமாய் நடக்க வெட்கப்பட்டவர்களாயும், மிகவும் குறைந்த வுணவைப் புசியாதவர்களாயும் இருந்தனர்." (ஸ்ட்ராபோ-Strabo.)

இவ்விருத்தாந்தத்தை அலக்ஸாண்டர் கேட்டதும், மாண்டனிஸை மெச்சி அவரைத் தம் பிரியப்படி நடக்க விட்டுவிட்டார். எனினும் அவரைக் காணவேண்டும் என்னும் அவா முன்னிலும் அதிகரித்தது. வயது சென்றவரும் நிர்வாண ஸ்வரூபத்தோடு கூடியவருமான அச்சந்நியாசி ஒருவரிடம்தான், பல தேசங்களையும் ஜயித்த அலக்ஸாண்டர், தன்னிலும் உயர்வான ஒருவரைக் கண்டார். அவ்வரசர், "நான் வந்தேன், பார்த்தேன், **ஜெயித்தேன்**" என்று சொல்வதைவிட, "நான் வந்தேன், பார்த்தேன், சரீர சம்பந்தமான யுத்தத்தில் வெற்றிபெற்ற ஒரு நிர்வாண சந்நியாசியால் **ஜெயிக்கப்பட்டேன்**" என்று கூறியிருக்கலாம்.

இந்த விஷயத்தை முடிக்கும் தறுவாயில் பாரஸீகக் கவியாகிய பர்டாவிஸி (Fordausi) யால் கூறப்பட்டதும், அபுல் பாஸல் (Abul Fazl) என்ற வித்வான் ஐனி அக்பரி (Aini-Akbari) என்னும் நூலில் அலக்ஸாண்டரைப்பற்றிக் கூறும் சந்தர்ப்பத்தில் மேற்கோள் காட்டியதும் ஆகிய பின்வரும் வரிகளைக் கூற விரும்புகிறேன். அவர் அந்நூலில் கூறுகிறார்:— "அலக்ஸாண்டர் பிராம்மணரின் நாட்டிற்குத் திரும்பினார். அவர்களில் தலைமைவகித்தவர், 'செல்வத்தையும் உலகப் பொருள்களையும் தேடிய அரசனுக்குத் தங்களிடம் அவைகளில் ஒன்றும் அகப்படா' என்று தெரிவித்தார்.

* ஞானமு மறிவும் நீங்காது தங்கி
ஆனந் தத்தை அளிக்கும் கண்டீர்!
நிலவுல கணையாய் நீட்கங் கூரையாய்
செலவுள இடத்திற் சிந்தையைத் தூண்டுமே.

(நீட்கம்=நீள்கம்—நீண்ட ஆகாயம்)

தபால் கொள்ளைக்காரர்கள்

(318-ம் பக்கத் தொடர்ச்சி)

செட்டி :—அப்படிப்பட்ட அவசரத்தில் உங்களில் ஒருவர் பத்திரங்களையெடுத்துக்கொண்டு நேரில் வந்திருந்தால் கலந்து பேசித் தோராயமாய் இவ்வளவு பணம் வேண்டுமென்றறிந்துகொண்டு கையில் கொண்டுவந்திருக்கலாம். நான் எவ்வளவு பணம் வேண்டுமென்று உத்தேசிப்பது? மேலும் இவ்வூரில் தனியே பெருந்தொகையை யென்போன்ற கிழவன் எப்படி எடுத்துவருவது. இப்போதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. ஐந்நூறுக்கு ஒரு உண்டி (செக்) கொடுக்கிறேன். பணம் பெற்றுக்கொண்டு போங்கள். மீதிப் பணத்தை யெவ்விடத்திற்கு அனுப்பச் சொல்லுகிறீர்களோ அங்கு அனுப்பிவிடுகிறேன்" என்றான்.

கள்ளர்களுக்கு அந்த ஏற்பாடு சம்மதியில்லை. இருவரும் சற்று நேரம் சிந்தித்தபின், "அப்படி வேண்டாம். இன்னும் அரைமணி நேரத்திற்குள் நவீனபுரிக்கு ஒரு வண்டி செல்கிறது. அதில் போய் நாளை யிரவு 9 மணிக்கு இங்கு வரும் மெயில் வண்டியில் பணத்தோடு வந்து அவசியம் சேரவேண்டும். நாங்கள் பிரயாணத்திற்குச் சர்வாயத்தமாய் ஸ்டேஷனில் உன்னைச் சந்தித்துப் பணத்தை வாங்கிக்கொண்டு அதே வண்டியில் ஏறிவிடுவோம்" என்றார்கள்.

செட்டி சற்றுநேரம் சிந்தித்துப் பிறகு "சரி அப்படியே யாகட்டும். உங்களுக்கு இடையிலிருக்கும் காலம் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்யப் போதுமல்லவா?" என்றான்.

சாமிநாதன் தன் நண்பனை நோக்கி "என் அதற்குள் நமது ஏற்பாடுகளை யெல்லாம் முடித்துக்கொள்ளலா மல்லவா? இப்போதே புறப்பட்டு

---

* ஞானமும் அறிவும் நம்மோடு இருந்து ஆனந்தத்தை (நமக்குத்) தரும். உலகமே படுக்கும் அணையாகவும், நீண்ட ஆகாயம் கூரையாகவும் (இருந்துகொண்டு) அடையவேண்டிய மோட்சத்தினிடத்து (நம்) சிந்தையைத் தூண்டும்.

வெள்ளைக் குடிசைக்குச் சென்று அந்த வேலையை யுடனே முடித்துக் கொள்வோம்......" என்பதற்குள்,

செட்டி அவன் கடைசியில் கூறிய மொழிகளைக் கேட்காதவன்போல் "எங்காவது போங்கள், எதாவது செய்துகொள்ளுங்கள். அவற்றையெல்லாம் நான் கேட்கவில்லை. நாளை யிரவு சரியாய் வண்டிவரும் வேளைக்கு ஆயத்தமாய் ஸ்டேஷனில் இருக்கவேண்டும். அவ்வளவே எனக்கு வேண்டியது" என்றான்.

இரங்கநாதன் உடனே செட்டியை வண்டியில் ஏற்றிக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்று நவீனபுரிக்கு ஒரு பிரயாணச்சீட்டு வாங்கியளித்து இரயில் வந்தவுடனே அதில் ஏற்றித் தவறாமல் வேளைக்கு வந்து சேரும்படி கூறிவிட்டுச் சென்றான்.

செட்டியாரோ பிரயாணச் சீட்டிற்குக் கொடுத்த பணம் வீணாயிற்றே யென்று கூடக் கருதாமல் அடுத்த ஸ்டேஷனிலேயே அவசரத்தோடு இறங்கிப் பிரயாணிகள் தங்கும் ஒரு அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார். அச்சமயம் ஒருவன் பார்த்திருந்து பிறகு கால்மணிநேரம் கழித்தபின் மறுபடி ஆள் வெளியில் வருவதைக் கண்டிருந்தால் அவனுக்குண்டாகும் வியப்பு கொஞ்சமா யிருந்திராது. ஏனெனில் செட்டியார் மாயமாய் மறைந்துபோய் நமது ஆனந்தசிங் வெளியில் வந்தான்.

17-வது அத்தியாயம்.

நமது கோமளவல்லி அருஞ்சிறையிலிருக்கிறாள். அவள் மனம் பீதியடைந்துவிட்டது. ஏனெனில் இதுகாறும் ஒருவரும் தைரியம் கூறுபவருமில்லை.

அத்துஷ்டர்கள் அவளை யங்கு சிறைவைத்தபின் ஒருதரமே யவளைக் கண்டார்கள். அந்த வெள்ளைக் குடிசை ஹரியாற்றின் கரையில் (ஆனந்தசிங் கருதியதுபோலவே) ஒரு மேடான விடத்திலிருந்தது. அவள் அறை ஆற்றோரத்தின் பக்கமாயிருந்தது. அதின் சாளரத்திலிருந்து பார்த்தால் நேரே செங்குத்தாய் நூறு அடிகளுக்குக் கீழ் ஆற்று ஜலம் ஓடுகிறது. அதைக் கண்டதே அக்கன்னிகை தப்பித்துக்கொண்டு போக முயற்சி செய்யலாம் என்ற எண்ணத்தை யடியோடு விட்டுவிட்டாள்.

இங்கு அவளுக்குக் காவலாயிருக்கும் மாது முன் சாமிநாதன் வீட்டிலிருந்தவளைப்போல் இரக்கமுடையவளல்ல. அவள் மனம் முறிந்துபோக வேறென்னவேண்டும். இவ்வாறிருக்க ஒருவாரம் கழித்துச் சாமிநாதன் திடீலென்று அவள் அறைக்கு வந்தான். அவன் அவளைப் பயங்கரமான பார்வையாய்ப் பார்த்து,

"கோமளவல்லி! நான் முடிவாய் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்க வந்தேன். இதுவரையில் நீ யென் காதலை அலட்சியம் செய்துவந்தாய். நான் உண்மையாகவே யுன்மேல் மனப்பூர்வமான காதல் கொண்டிருக்கிறேன். நீயோ ஒரு ஆதரவுமில்லாத அனாதையாயிருக்கிறாய். உனக்கு உதவி அவசியம் வேண்டியது......" என்றபோது,

கோமளவல்லி:—"இரு இரு அவசரப்படாதே. எனக்கு யாரும் ஆதரணை யில்லைதான். ஆனால் ஆண்டவன் எனக்கு இரண்டு கரங்களையு மளித்திருக்கிறார். அவை யிருக்குமட்டும் நான் கஷ்டப்பட்டு ஜீவனம் செய்துகொள்வேன்" என்றாள்.

சாமிநாதன் :—" இரு இரு. நான் சொல்வதைக் கேள். என்னை மணம் புரிந்துகொண்டால் நான் உன் பிரியமனைத்தும் பூர்த்திசெய்வேன். நீ கஷ்டமின்றி யொரு சீமாட்டியைப்போல் வசிக்கலாம். இன்னும்........." என்பதற்குள்,

கோமளவல்லி :—"பொறு பொறு, போதும் போதும்; வீணாய் இன்னும் ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம். நான் ஒரே வார்த்தையில் முடித்துவிடுகிறேன். அதாவது உன்னை நான் மணம்புரிவதைவிடப் பிராணத்தியாகம் செய்துகொள்வேன்" என்றாள்.

சாமிநாதன் தன் கோபத்தை யடக்கிக்கொண்டு புன்னகையோடு, "அப்படித் தற்கொலை புரிந்துகொள்வாயாயின் சரிதான் உன் பிரியம். அப்படியல்லாதவரையில் நான் உன்னை மணம்புரியாமல் விடுவதில்லை. நீ யிதுவரையில் கொண்டிருந்த பிடிவாதத்தை விட்டுவிடு. நாளை யிரவு நமது கலியாணம் முடிந்து நாம் உடனே அன்னிய நாட்டிற்குச் செல்வோம். நீ சர்வாயத்தமா யிருக்கவேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதே கோமளவல்லி மிக்க திகிலடைந்து கடவுளே கதியென்று பிரார்த்தித்துக்கொண் டிருந்தாள். இரவு அதிக இருள் சூழ்ந்திருந்தது. அச்சமயம் ஏதோ ஒருவித சத்தம் கேட்டதும் உடனே அவள் மனதில் ஒருவித உற்சாகமும் சந்தோஷமும் உண்டாயின. கூடவே பயமும் திகிலு முண்டாய்விட்டன. நிதானித்துப் பார்த்தாள். சாளரத்திலிருந்து "பயப்படவேண்டாம்; நான் சினேகிதன்" என்று ஒரு சத்தம் மெதுவாய்க் கேட்டது.

உடனே அவளுடைய பயம் திகில் யாவும் போய்விட்டன. அதற்குள் ஒரு ஆள் அச் சாளரத்தின் வழியாய் அறைக்குள் வந்தான். சினேகன் என்றதே அவன் அம்பலவாணனோ வென்று சந்தேகித்தாள். ஆனால் உற்றுப் பார்த்தபோது தபாலிலாகாத் துப்பறிபவன் என்று தெரிந்தது.

ஆனந்தஸிங் அவளை நோக்கி "குழந்தாய்! ஒன்றுக்கும் நீ அஞ்சவேண்டாம். நாளையிரவு பொழுது விடிவதற்குள் நான் உன்னை யடியோடு அத்துஷ்டர்கள் கையிலிருந்து விடுவித்து விடுவதோடு அத்துஷ்டர்களையும் சிறைப்படுத்திவிடுவேன்" என்றான். பிறகு இருவரும் அரைமணி நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அதன்பின் ஆனந்தஸிங் தான் எப்படிச் சாளரத்தின் வழி யேறிவந்தானோ அவ்வழியே யிறங்கிச் சென்றான்.

* * * * * *

கள்ளர்களுடைய ஏற்பாட்டிற்கு ஒரு இடையூறும் நேரவில்லை. ஆகையால் அவர்கள் நிம்மதியாய்த் தங்கள் தங்கள் ஏற்பாட்டின்படி நடக்

கத் தொடங்கினார்கள். அதாவது இதுகாறும் தபால் வண்டியிற் கொள்ளையடித்த பொருளைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். அதாவது ஜக்கனையும் அவன் நண்பர்களையும் மறுநாளிரவு எட்டு மணிக்குள் சாமிநாதன் மாளிகைக்கு வரும்படி சமாசார மனுப்பியிருந்தார்கள். சாமிநாதன் கோமளவல்லியை முன்னாடியே தன் வீட்டில் கொண்டுபோய் மிக்க பந்தோபஸ்தில் வைத்துக்கொண்டான். முன் வந்திருந்த அதே குருவை யன்று வரும்படி திட்டமாய் ஏற்பாடு செய்துவிட்டிருந்தான். அன்று இரவு யாவும் முடித்துக்கொண்டு பதினொரு மணிக்கு வரும் வண்டியிலேறிச் செல்வதென்பது அவர்கள் தீர்மானம். இரங்கநாதன் துறைமுகத்திலிருந்து மறுநாட் காலை செல்லும் புகைக்கப்பலில் தூரதேசம் செல்லப் பிராயாணச் சீட்டும் வாங்கிவிட்டான். (தொடரும்)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

பொது சமாச்சாரம்

பாம்புக்கடி விஷத்தால் பரிகாரம்.

சீயத்தின் ஆராய்ச்சி:—பாம்புக்கடியைத் தீர்க்கும் பரிகாரங்களைக் காலா காலமாய் ஜனங்கள் தேடினார்கள். இலேசாக நம்பிவிடும் சுதேசிகள் எவ்வளவோ சூது வாதுகள் செய்யப்பட் டிருக்கிறார்கள். பாம்பின் விஷத்துக்குச் சிறந்த பரிகாரம் பாம்பின் விஷமேயென்று இப்போது மேதாவிகள் அறியலானார்கள். தற்காலம் இந்தப் பரிகாரம் ஓர் அளவையுடையதாயிருக்கின்றது. ஏதோ அசந்தர்ப்பத்தால் ஒருவனைத் திடீரென்று நல்லபாம்போ விரியன் பாம்போ தீண்டிவிட்டால் அவனுக்குச் செய்ய வேண்டிய சிறந்த பரிகாரமென்னவென்றால் அவனை எந்தப் பாம்பு தீண்டியதோ அதன் விஷத்தையோ நிண நீரையோ அவனுக்கு ஏற்றுவதேயாகும். ஒருவனை ஒரு பாம்பு கடித்திருக்க நாம் மற்றொரு பாம்பின் விஷத்தைக்கொண்டு அவனுக்குப் பரிகாரம் செய்யமுடியாது. ஒருவனைத் தீண்டிய பாம்பு இன்னவகைப் பாம்பென்று தெரிந்துகொள்வது அவசியம். அவனைக் கடித்த பாம்பின் நிண நீர் (serum) உடனே கிடைக்காவிட்டால் அவனுக்கு வேறெந்தவிதமான பரிகாரமுஞ் செய்யமுடியாது. ஜில்லா வைத்திய உத்தியோகஸ்தரிடம் பரிகாரம் பெறச்செல்லும் அநேக சுதேசிகளுக்குத் தங்களைக் கடித்த பாம்பு இன்னவகையைச் சேர்ந்ததென்று தெரியாமலிருக்கின்றது. பாம்புக்கடியால் இந்தியாவில் அதிகமானவர் மாண்டுபோகிறார்கள். இதைத் தடுக்கவேண்டுமானால் எந்தவகைப் பாம்பு தீண்டினாலும் அதன் விஷத்தை மாற்றக்கூடிய ஒரு பரிகாரத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் அவசியமாகும். பிரேஸ்ல் வாசியும் செரோதிராபிக் கூட்டத்தின் தலைவருமாகிய (Serotherapic Institute) டாக்டர் வைடல் எந்தவிதமான பாம்பு தீண்டினாலும் அதற்கெல்லாம் பரிகாரமாயிருக்கும்படி ஒரு நிண நீரைக் கண்டுபிடித்திருக்கிறாரென்று வெளியிடப்பட்டிருக்கிறது. இதைக்கண்டு இதைப்போன்ற ஒரு கூட்டத்தை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டுமென்ற உத்தேசத்தை ஆதரிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டைத் தூண்டியது. இந்தியாவிலிருக்கும் நச்சுப் பாம்புகளின் கடிக்குப் பரிகாரமாகக்கூடிய ஒரு நிண நீரைக் கண்டுபிடிப்பது சாத்தியமானதென்று இந்திய வைத்தியர் அபிப்பிராயப்படுகிகிறார்கள். பாங்காக்கிலுள்ள பாஸ்டர் கூடம் சயாம்தேசத்திற்கு இதே விஷயமாக ஆராய்ச்சி செய்யும் வேலையை ஏற்படுத்துவதாகவும் சயாம் தேசத்துப் பாம்புகளிலிருந்து நிண நீரைத் தயார் செய்வதாகவும் நம்புகின்றது. (தமிழகம்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

உருத்ரோத்காரி௵ சித்திரைமீ௴-கலி 5025—சாலிவாகனம் 1846
பசலி 1332—கோல்லம் 1098-99—ஹிஜரி 1341
இங்கிலீஷ் 1923௵ ஏப்ரல்மீ௴—மேமீ௴

சித்திரை	ஏப்ரல்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	வெ	திர60	பூரட்-45-55	சித்-60	வருஷப்பிறப்பு, விஷு புண்யகாலம்
2	14	சனி	திர1-55	உத்-53-53	சி53-53ம	மாத சிவராத்திரி
3	15	ஞா	ச● 8-25	ரேவ-60	அமி60	சர்வத்திர அமாவாசை,
4	16	திங்	அ14-58	ரேவ-1-45	சித்-60	[திருதினஸ்பிருக்
5	17	செ	பிர21-18	அசு-9-20	சித்-60	வைசாகசுத்தம், சந்திர தரிசனம் உற்றுப்பார்க்க
6	18	புத	துதி27-13	பர16-40	சி16-40அ	கிருத்திகை
7	19	வியா	திரி32-25	கிரு-23-20	மர-60	அக்ஷயத்திரிதிகை
8	20	வெ	சது36-50	ரோ-29-18	ம29-18சி	மாசசதுர்த்தி விரதம்
9	21	சனி	பஞ்40-3	மிரு-34-10	சித்-60	ரிஷபாயனம் நா-6-38
10	22	ஞா	சஷ்42-3	திரு-37-53	சித்-60	சஷ்டி, பிரயாணம் விலக
11	23	திங்	சப்42-30	புன-40 3	அ40-3சித்	சங்கோற்பத்தி
12	24	செ	அஷ்41-20	பூச40-40	சித்60	பிரயாணம் விலக்கல்
13	25	புத	நவ38-23	ஆயி-39-35	சித்60	பிரயாணம் விலக்கல்
14	26	வியா	தச33-55	மக-36-45	அ36-45சி	மங்கிலியஞ் செய்ய
15	27	வெ	ஏகா27-48	பூர 32-23	சித்-60	மத்வ, சர்வ, ஏகாதசி
16	28	சனி	துவா20-8	உத்-26-43	மர-60	சனிப்பிரதோஷம்
17	29	ஞா	திர11-35	அஸ்-20-0	அ20-0சித்	நரசிம்ம ஜயந்தி
18	30	திங்	சது2-20 ○ 52-51	சித்-12-45	பி12-45அ	அர்த்தநாரீசுவர விரதம், சித்ராபௌர்ணமி
19	1	செவ்	பிர 43-53	சுவா-5-13 விசா-58-0	சி5-13மர	வைசாகபகுளம், அவமாகம் [செய்ய
20	2	புத	துவி34 43	அனு-51-35	சித்-60	பும்சவனம் நிஷேகஞ்
21	3	வியா	திரி27-5	கேட்-46-23	பி46-23சி	பார்த்தீப கல்பாதி
22	4	வெ	சது21-3	மூல-42-45	அ42-45பி	கத்திரி ஆரம்பம்
23	5	சனி	பஞ்16 45	பூரா-41-8	சித-60	
24	6	ஞா	சஷ14 33	உத்-41-35	அமி-60	
25	7	திங்	சப்14 25	திரு44-10	அ44-10சி	
26	8	செவ்	அ16-23	அவி48-38	சி48-38ம	
27	9	புத	நவ20-8	சதை54-35	சி54-35அ	
28	10	வியா	தச25-15	பூரட்60	சித்-60	
29	11	வெ	ஏ31-30	பூரட்-1-53	சித் 60	
30	12	சனி	து37-58	உத்-9-35	சி9-35மர	
31	13	ஞா	திர44-25	ரேவ-17-28	அ17-28சி	

1923௵ மே௴

	சூரி புத	செ	
சே சுக்	8உ மீன-சுக் 14உ ரிஷ-பு		
			ராகு
		குரு	சனி

Printed & Published by N. Munisawmi Mudaliar at the
"Ananda Bodhini" Power Press, 15, Venkatesa Maistry St., Madras.